REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

மின்னிதழ்

2024 மே 25 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 124 | Saturday 25, May, 2024 | 11 பக்கங்கள் | 50/-


**கதிர்காமம் ஆடிவேல் திருவிழா**

## கன்னிக்கால் நடும் நிகழ்வு நேற்று; ஜூலை 06ஆம் திகதி கொடியேற்றம்

**காரைதீவு குறூப் நிருபர்**



வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் திருவிழாவுக்கான கன்னிக்கால் அல்லது பந்தல்கால் 06

# யாழ்ப்பாணம் வைத்தியசாலை விரைவில் தேசிய வைத்தியசாலையாக மாற்றப்படும்

## வடக்கில் உயர்தர சுகாதார சேவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## யாழ். நகரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



**யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு அபிவிருத்தியின் நன்மைகள் அந்த மக்களுக்கும் வழங்கப்படும்**

வடமாகாணத்தில் உயர்தர சுகாதார சேவையை உறுதி செய்யும் வகையில் யாழ்ப்பாண வைத்தியசாலை விரைவில் தேசிய வைத்தியசாலையாக மாற்றப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டிடத்தை நேற்று (24) முற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

பொறியியல் பீடங்கள், மருத்துவ பீடங்கள், விஞ்ஞான பீடங்கள், விவசாய பீடங்கள் உட்பட 06



**தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்**

## நாளை முதல் ஜூன் 01ஆம் திகதிவரை அரசு பிரகடனம்

**மே மாதம் மட்டும் 09 பேர் மரணம்**



தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் நாளை 26ஆம் திகதி முதல் ஜூன் 01 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மழையுடனான காலநிலை காரணமாக 06

**ஜனாதிபதி தேர்தலை நடத்தி இன்னும்**

## 05 வருடங்களுக்கு ரணிலிடம் நாட்டை ஒப்படைப்பதே பொருத்தம்



நாட்டில் தற்போதுள்ள நிலைக்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி இன்னும் ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதி பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைப்பதே பொருத்தமானதென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான 06

## கொழும்பு பங்குச்சந்தையில் அபாரமான வளர்ச்சி



கொழும்பு பங்குச்சந்தை, தெற்காசிய பிராந்தியத்தில் வேகமாக வளர்ந்து வரும் சந்தை என்பதை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் அபாரமான வளர்ச்சியை காட்டியுள்ளது. இதன்படி வெசாக் பண்டிகையை முன்னிட்டு பங்குச் சந்தை மூடப்படுவதற்கு முன்னைய தினத்தில் கொழும்பு பங்குச் சந்தை அனைத்து பங்கு விலைச் 06

**தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு**

## சமுகமளிக்க தவறியவர்களுக்காக மீண்டும் நாளை நேர்முகப் பரீட்சை



2021 ஆம் ஆண்டு குழுவுக்கான மாணவர் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காத விண்ணப்பதாரர்களுக்கான மற்றுமொரு திகதியை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 06

## மறைந்த ஈரான் ஜனாதிபதி ரைசிக்கு இலங்கை குழு தெஹ்ரானில் அஞ்சலி



ஈரானிய ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசியின் இறுதிச் சடங்கில் வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தலைமையிலான தூதுக் குழுவினர் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம்.அலி சப்ரி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர், மறைந்த ஜனாதிபதி கலாநிதி செய்யது இப்ராஹிம் ரைசி மற்றும் வெளிவிவகார அமைச்சர் Dr. Hossein Amirabdollahian மற்றும் சிரேஷ்ட 06

**வர்த்தக வங்கிகள் ஊடாக**

## விசேட கடன் திட்டங்கள் அடுத்த வாரம் அறிமுகம்



வர்த்தக வங்கிகள் ஊடாக பல விசேட கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வர்த்தக வங்கிகள் ஊடாக பல விசேட கடன் திட்டங்களை எதிர்வரும் வாரத்திலிருந்து நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மானிய வட்டி விகிதத்தில் இக்கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், 06

**இந்தியாவில் கைதான ISIS குழுவுடன்**

## தொடர்புடைய மற்றுமொரு நபர் மாளிகாவத்தையில் கைது



இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ் நபர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் மற்றுமொரு நபர், கொழும்பு, மாளிகாவத்தையில் கைது செய்யப்பட்டுள்ளார். ஐ.எஸ்.ஐ.எஸ் குழுவுக்கு விமான பயணச் சீட்டுளை வழங்குவதில் உதவிய நபரையே பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 06

**சட்டவிரோத குடியேற்றம்**

## மலேசியாவிலிருந்து 1,500 இலங்கையர் நாடு கடத்தல்


மலேசியாவிலிருந்து கடந்த 02 மாத காலப்பகுதிக்குள் 1,500 க்கும் மேற்பட்ட சட்டவிரோத இலங்கை குடியேற்றவாசிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 1,608 சட்டவிரோத இலங்கை குடியேற்றவாசிகள் மலேசியாவில் வசிப்பதாக மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினால் கண்டறியப்பட்டுள்ளது.

மலேசிய அரசாங்கத்தினால் கடந்த மார்ச் 01ஆம் திகதி முதல் ஏப்ரல் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மலேசியாவிலுள்ள புலம்பெயர்ந்தோரைத் திருப்பி அனுப்பும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 06

**கடும் காற்றுடனான அடை மழை**

## மாதம்பை, மஹவெவ பகுதியில் மரம் முறிந்து 02 பெண்கள் பலி



மாரவில, மாதம்பை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்ததில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாத்தாண்டி, 06



03

**பெற்றோருக்கு மருத்துவர்கள் எச்சரிக்கை**

## நாட்டில் சுமார் 60 வீதமான சிறார்கள் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமை

**மீனவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை**

## தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு

**இன்று புயலாக மாற்றமடைய வாய்ப்பு**



நாட்டின் பல பகுதிகளில் பலத்த காற்று வீசுவதுடன், நாட்டை சூழவுள்ள கடல் பிரதேசத்தில் கடும் சீற்றம் 06

**நாட்டின் சீரற்ற காலநிலையால் ஏற்படும்**

## அவசர நிலைக்கு முகங்கொடுக்க சகல தரப்பும் தயார் நிலையில்




**ஸாதிக் ஷிஹான்**

நாட்டில் நிலவும் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தலைமையில் 06

**நாட்டில் சீரற்ற காலநிலையால்**

## 8,944 குடும்பங்களை சேர்ந்த 34,880 பேர் பாதிப்பு

**மேல் மாகாணத்திலேயே அதிகம்**






நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரை 8,944 குடும்பங்களை சேர்ந்த 34,880 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் (23) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 06

## பப்புவா நியூகினியாவில் அதிகாலை பாரிய மண்சரிவு

**100க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு**



பப்புவா நியூகினியாவில் நேற்று ஏற்பட்ட பாரிய மண்சரிவில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. தென் பசுபிக் தீவு நாடான பப்புவா நியூகினியாவின் தலைநகர் போர்ட் மோர்ஸ்பிக்கு 06





கங்காராம புத்த ரஷ்மி வெசாக் வலயத்தில்



பேலியகொடை வெசாக் வலயத்தில்

**வெசாக் உற்சவத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள வெசாக் வைபவங்களில் கலந்துகொண்டு ஆரம்பித்து வைப்பதை படங்களில் காணலாம்.**





ஷங்கிரில்லாவில்







மருதானை வெசாக் வலயத்தில்



ஜனாதிபதி செயலகத்தில் பக்தி கீதம்











லேக் ஹவுஸ் பௌத்த சங்கம் மற்றும் நிறுவன நிர்வாகத்தினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்த லேக் ஹவுஸ் “அமாத ஹர” வெசாக் வலய பக்தி கீதம் நிகழ்வு நேற்று இரவு நடைபெற்றது. நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், நிதி பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள மாகும்புர மற்றும் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

படங்கள்: சிந்தக குமாரசிங்க
சுதத் நிஷாந்த
நிஷங்க விஜேரத்ன







தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2024 மே 25 சனிக்கிழமை

**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.33
ளுஹர் - 12.08
அஸர் - 03.32
மஃரிப் - 06.21
இஷா - 07.36

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் வைகாசி 12

ராகுகாலம் : காலை : 8.52 - 10.22வரை
சுபநேரம் : பகல் : 2.52 - 4.22வரை

யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி









யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டிடத்தை நேற்று (24) முற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்...

**மூன்று விமானப்படை தளங்களில்**

## திடீர் அவசர நிலை மீட்புக்காக 03 ஹெலிகொப்டர்கள் தயார்

திடீர் அவசர நிலையை கருத்தில் கொண்டு விமானப்படையின் மூன்று ஹெலிகொப்டர்கள் மூன்று பிரதேசங்களில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக விமானப் படையின் ஊடகப் பேச்சாளர் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று ஹெலிகொப்டர்களும் கட்டுநாயக்க, இரத்மலானை மற்றும் ஹிங்குராக்கொட விமானப் படை தளங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று ஹெலிகொப்டர்களும் அவசர நிலை தொடர்பான தகவல்கள் கிடைத்தவுடன் உடனடியாக மீட்புப் பணிகளுக்காக புறப்படுமென்று விமானப்படை தெரிவித்துள்ளது. வெள்ளத்தினால் நாட்டின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனமை குறிப்பிடத்தக்கது.

**பெற்றோருக்கு மருத்துவர்கள் எச்சரிக்கை**

## நாட்டில் சுமார் 60 வீதமான சிறார்கள் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமை

**நீரிழிவு நோய் ஏற்படுவதாக ஆய்வில் தகவல்**



இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதமானோர் கையடக்கத் தொலைபேசி பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திலுள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர்கள் குழுவொன்று ஆய்வை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதில் பல சிறுவர்கள் இரவு நேரத்தில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சிறுவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கையை சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

கையடக்க தொலைபேசிகளுக்கு அடிமையான சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் உடல் சரியாக செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

அவர்கள் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடந்து கொள்வதாகவும், பெற்றோரால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவசியமாக இருந்தால் மட்டும் எந்தவொரு சிறுவர்களையும் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கும் குறைவாக கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்குமாறு பெற்றோரிடம் மருத்துவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# தினகரன்
THINAKARAN

## 92

**வருடங்களுக்கு முன்**

## தினகரன்

**இன்று 25 மே 1932**




### அடமான பாங்க் நிர்வாகிகள்

**சர்க்கார் அடமான பாங்கின் நிர்வாக சடையங்கத்தினர்களும் மானேஜரும்**

இடது புறமிருந்து வலது புறமாக நிற்பவர்கள்: திரு. இ. ஜி. ஆதமலி, திரு ஏ. மகாதேவ (மானேஜர்) திரு. ஏ. இ. டி சில்வா.

உட்கார்ந்திருப்பவர்கள்: திரு. கே. பாலசிங்கம், சர். எச்.எம். பர்னாந்து, திரு. ஏ.சி.ஜி. விஜயகூன்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

**ஐக்கிய அரபு அமீரக அரசாங்கம்**

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு Golden Visa வழங்கி கௌரவிப்பு



ஐக்கிய அரபு அமீரக அரசு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை கௌரவிக்க Golden Visa வழங்கி வருகிறது. கோல்டன் விசா வைத்து இருப்பவர்கள் 10 ஆண்டுகளுக்கு ஐக்கிய அமீரகத்தின் குடிமகன்களாக கருதப்படுவார்கள்.

இந்திய நடிகர்கள் பலருக்கு ஐக்கிய அமீரகத்தின் கோல்டன் விசா வழங்கப்பட்டுள்ளது.

நடிகர்களான சஞ்சய் தத், ஷாருக் கான், மம்முட்டி, மோகன்லால், பிருதிவிராஜ், துல்கர் சல்மான், கமல் ஹாசன், விஜய் சேதுபதி ஆகியோர் Golden Visa பெற்றுள்ளனர்.

நடிகைகளான மீரா ஜஸ்மின், திரிஷா, ஜோதிகா, அமலாபால், லட்சுமி ராய், காஜல் அகர்வால், பாடகி சித்திரா மற்றும் இயக்குநரும் நடிகருமான ஆர்.பார்த்திபன் ஆகியோருக்கும் அமீரக அரசு Golden Visa வழங்கியுள்ளது.

இந்நிலையில் சூப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்துக்கு Golden Visa வழங்கி ஐக்கிய அரபு அமீரக அரசு கௌரவப்படுத்தியுள்ளது.

**நிலவும் கடும் மழை, பலத்த காற்று**

## மலையக வீதிகளில் மரங்கள் முறிந்து விழும் அபாயம்

**சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை**



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நிலவும் கடும் மழை மற்றும் கடும் காற்றுடன் கூடிய மோசமான காலநிலை காரணமாக நேற்று (24) அதிகாலை ஹப்புத்தளைக்கும் தியத்தலாவைக்கும் இடைப்பட்ட பகுதியில் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் வீதி முற்றாக தடைப்பட்டிருந்ததாக தியத்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இப்பகுதியிலுள்ள பாரிய மரங்கள் எந்த நேரத்திலும் விழும் அபாயம் காணப்படுவதாக சாரதிகளும் பிரதேசவாசிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வீதியை பயன்படுத்துவோர் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும், மாற்று வீதியாக தியத்தலாவ உடபர கஹகொல்ல ஊடாக பண்டாரவளை வீதியை பயன்படுத்துமாறும் தியத்தலாவ பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சாகர தயாரத்ன தெரிவித்தார்.

தியத்தலாவ இராணுவம், தியத்தலாவ பொலிஸார், ஹப்புத்தளை விசேட அதிரடிப்படை, ஹப்புத்தளை பிரதேச சபை, ஹப்புத்தளை பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனர்த்த பிரிவின் குழுக்கள் இணைந்து பிரதான வீதியில் வீழ்ந்துள்ள மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு.ஈ.எம்.எல்.உதயகுமார தெரிவித்தார்.

## பொது மன்னிப்பு காலத்தில் 1,289 கடற்படையினர் சரண்

விடுமுறையின்றி கடமைக்கு சமூகமளிக்காத 1,289 கடற்படையினர் சரணடைந்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முதல் மே மாதம் 20 ஆம் திகதி வரை கடற்படையால் அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்புக் காலப் பகுதியிலேயே இவர்கள் இவ்வாறு சரணடைந்துள்ளனர்.

இதற்கமைவாக பொது மன்னிப்புக் காலப்பகுதியில் விடுமுறையின்றி கடமைக்கு சமூகமளிக்காத 1,254 கடற்படையினர் கடற்படை தளங்களிலும் 35 பேர் நிகழ்நிலை ஊடாகவும் சரணடைந்ததாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

## வென்னப்புவவில் தொலைபேசி இணைப்புகளை திருடிய 07 பேர் கைது

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

வென்னப்புவ பிரதேசத்தில் நிலத்தடி தொலைபேசி இணைப்புகளுக்கான உபகரணங்களை திருடி அதனை பழைய இரும்புக் கடையொன்றில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ரெலிகொம் நிறுவனத்தில் பணியாற்றும் ஏழு தொழில்நுட்பவியலாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான வயர்களை இச்சந்தேக நபர்கள் திருடி விற்பனை செய்துள்ளமை தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ, துனுவில பிரதேசத்திலிருந்து கிரிமெட்டியான சந்திவரை 4 கிலோமீற்றர் தூரத்துக்கு நிலத்தடியூடாக புதைக்கப்பட்டிருந்த தொலைபேசி இணைப்புகள் இவ்வாறு வெட்டி எடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் கூறினர். கடுநேரிய, மாரவில, தொடுவாவ, கொஸ்வத்த, ஆனமடுவ மற்றும் கொபேய்கேன் பிரதேசங்களைச் சேர்ந்த இச்சந்தேகநபர்கள் 38, 43, 37, 35, 51, 41, 56 வயதுடையவர்களாவர்.

வென்னப்புவ பிரதேசத்தில் ரெலிகொம் நிறுவனம் ஏலம் விடுவதற்காக போடப்பட்டிருந்த நிலத்தடி தொலைபேசி இணைப்புகளை சிலர் வெட்டி அகற்றியதை தம்மால் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை நேற்றுடன் நிறைவு



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

ஆறு மாதகாலமாக இடம்பெற்று வந்த சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை நேற்று வெள்ளிக்கிழமையுடன் (24) நிறைவு பெற்றுள்ளது.

சிவனொளிபாதமலை உச்சியில் பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருந்த பூஜைப் பொருட்கள் மற்றும் புனித விக்கிரங்கள் அனைத்தும் நேற்றையதினம் நல்லதண்ணியில் இருக்கும் விகாரைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்னவினால் பிரித் ஓதப்பட்டு மேற்படி பூஜைப் பொருட்கள் மற்றும் புனித விக்கிரகங்கள் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் இரத்தினபுரி பெல்மதுளை ரஜமகா விகாரைக்கு வாகன தொடரணியாக எடுத்து செல்லப்படும்.

நோட்டன் லக்ஷபான வழியாக கிதுல்கலை, கரவனல்ல, தெகியோவிட்ட, யட்டியாந்தோட்டை, அவிசாவளை வழியாக இரத்தினபுரி ரஜமகா விகாரைக்கு கொண்டு செல்லப்படும். அங்கு பூஜைக்காக வைக்கப்பட்டு எதிர்வரும் டிசம்பர் மாதம் பௌர்ணமி தினத்தில் வழிபாட்டுக்காக சிவனொளிபாதமலைக்கு மீண்டும் கொண்டு வரப்படவுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஆரம்பமன சிவனொளிபாதமலைக்கான யாத்திரை பருவ காலத்தில் வழமை போன்று இம்முறையும் பல இலட்சக் கணக்கான யாத்திரிகர்கள் சிவனொளிபாத மலைக்கான யாத்திரையை மேற்கொண்டிருந்ததாக சிவனொளி பாத மலைக்கு பொறுப்பான நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 12ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 16

## குறள் தரும் சிந்தனை



பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீ அற்று

விலைமாதர்கள் பணத்துக்காக மட்டுமே ஒருவரைத் தழுவிப் பொய்யன்பு காட்டி நடிப்பது, இருட்டறையில் ஓர் அந்நியப் பிணத்தை அணைத்துக் கிடப்பது போன்றதாகும்.

# அனர்த்தங்கள் விடயத்தில் அவதானம் அவசியம்!

மழை, வெள்ளம், சூறாவளி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது பொதுமக்கள் மிகுந்த அவதானம் பேணுவது அவசியமாகின்றது. ஏனெனில் இயற்கை அனர்த்தங்களின் போது உடைமை அழிவுகள் மாத்திரமன்றி, உயிர்ச்சேதங்களும் ஏற்படுகின்றன.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில்,எமது நாட்டைப் பொறுத்தவரை இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புகள் குறைவென்றுதான் கூற வேண்டும். அதுமாத்திரமன்றி, எரிமலை போன்ற ஆபத்தான அனர்த்தங்கள் இலங்கையில் ஏற்படுவதில்லை. எமது நாட்டை மிகமோசமாகத் தாக்கிய இயற்கை அனர்த்தமென்றால் அது சுனாமி அனர்த்தமேயாகும். சுனாமி அனர்த்தமானது ஓரளவு முன்கூட்டியே எதிர்வு கூறக் கூடியதாகும். அதேபோன்று மழை, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களும் முன்கூட்டியே எதிர்வு கூறக் கூடியவையாகும்.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற காலநிலையை எடுத்துக் கொண்டால், மலையகத்தில் மண்சரிவு ஏற்படுவதற்கான ஆபத்துகள் அதிகமாக உள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மலையகத்தில் தொடர்ச்சியாக மழை பெய்யுமானால், காலப்போக்கில் மண்சரிவு ஏற்படுவதற்கான ஆபத்து ஏற்படுமென்பதை மறுப்பதற்கில்லை.

தொடர்ச்சியாக மழை பெய்கின்ற போது நிலம் படிப்படியாக இலகுத்தன்மை அடைகின்றது. காலப்போக்கில் உயரத்தில் இருக்கின்ற மண்திட்டு ஒன்று திடீரென்று கீழே சரிந்து விழுந்து பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்துகின்றது. வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழப்புகளும், உடைமை இழப்புகளும் ஏற்படுகின்றன.

இலங்கையில் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்களில் மண்சரிவு அனர்த்தமே பாரதூரமானதாகும். மழை, வெள்ளம், சூறாவளி போன்ற அனர்த்தங்கள் முன்கூட்டியே எதிர்வுகூறப்படுவதால், மக்கள் முன்னதாகவே ஓரளவு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும். ஆனால் மண்சரிவு அனர்த்தமானது அவ்வாறானதல்ல. ஓரிரு செக்கன்களுக்குள்ளேயே ஏற்பட்டு பாரிய சேதங்களை உண்டாக்கி விடுகின்றது.

மழையானது தொடர்ச்சியாக பொழியும்போது மண்சரிவு ஏற்படும் அபாயம் எழுகின்றது. அதாவது உயரமான பகுதிகளில் மழை பொழியும்போது மழை நீரானது உட்புகுந்து மண்படைகளை இலேசானதாக செல்வதன் மூலம் மண்ணின் பிடிமானம் குறைவடைகின்றது. இதன் காரணமாக மண் படையமைப்பு தனது இருப்பை விட்டு இடம்பெயரும் போது மண்சரிவு ஏற்படும்.

மண்சரிவுகளில் பெரும்பாலானவை சாய்வுகளை கொண்ட உயர்நிலை பிரதேசங்களில் ஏற்படுகின்றன. சாய்வுகளில் குத்துச் சாய்வுகளில் மிக விரைவாக ஏற்பட வாய்ப்பு உள்ளது. கிடையான பகுதிகளில் மண்சரிவு ஏற்படும் ஆபத்து குறைவாகக் காணப்படும்.

மனிதன் தனது பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு நிலத்தினை பயன்படுத்துகின்றான். குறிப்பாக விவசாய நடவடிக்கைகள், குடியிருப்புகளை அமைத்தல் போன்றவற்றினால் நிலத்தினை மாற்றி அமைகின்றான். இதன் காரணமாக இயற்கை தன்மையினை மாற்றும்போது மண்சரிவு தூண்டுவிக்கப்படுகின்றது.

இன்று உலகில் அபிவிருத்தி, நகராக்கம் போன்ற செயற்பாடுகளினால் கட்டடங்களை நிர்மாணிக்கவும் கற்களைப் பெறவும் நிலத்தைச் சமப்படுத்தவும் மலைகள் உடைக்கப்படுகின்றன. இதன் காரணமாக பாறைகள் அசைவுக்கு உட்பட்டும் மண்சரிவு ஏற்படுகின்றது.

இலங்கையின் இரத்தினக்கல் அகழ்வு இடம்பெறுகின்றது. இரத்தினக்கல் பெறும் பொருட்டு நிலம் ஆழமாகத் தோண்டப்படுகின்றது. இதன் காரணமாக மண்ணின் படையமைப்பு குலைக்கப்படுவதுடன் அயற்பகுதியும் சேர்ந்து நிலச்சரிவுக்கு உள்ளாகின்றது.

முறையற்ற பயிர்ச்செய்கை நடவடிக்கைகளாலும் மண்சரிவு அனர்த்தம் ஏற்படுகின்றது. அதாவது உயர் பிரதேசங்களிலும் சாய்வான பகுதிகளிலும் பயிர்ச்செய்கை திட்டமிடப்படாதவாறு நடைபெறுவதன் மூலம் மண்பகுதிகள் அசைவுக்கு உட்படுகின்றன. இதுவும் மண்சரிவுக்கான காரணமாகின்றது.

சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக இன்று அநேகமான இடங்களில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு உயர்வான மலைப்பிரதேசங்களிலும், சாய்வான பகுதிகளிலும் மனித தேவைக்கு கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. இதன் காரணமாக முறையற்ற நிர்மாணிப்பின் போது மண்சரிவு ஏற்படுகின்றது.

மலையகத்தில் கடந்த காலங்களில் பல்வேறு இடங்களில் மண்சரிவு அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளமை நினைவிருக்கலாம். அந்த அனர்த்தங்களில் பலர் பலியாகியிருக்கின்றனர். அன்றைய துயர அனுபவங்களை கருத்திற் கொண்டு மலையத்தில் வசிப்போர் இன்றைய காலத்தில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இது ஒருபுறமிருக்க, நாட்டில் நிலவும் மழை காரணமாக இரண்டு நாட்களில் கொழும்பு நகர எல்லையில் சுமார் 20 மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. அதன் காரணமாக கொழும்பு நகரில் மரங்கள் ஆபத்தானவை என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை கொழும்பு நகர எல்லையில் ஆபத்தான நிலையில் உள்ள சுமார் 200 மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இதுவரை சுமார் 100 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை நாட்டின் பல பிரதேசங்களில் நிலவுகின்ற இன்றைய காலத்தில் அனர்த்தங்கள் குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஈரானின் துணிச்சல்மிக்க தலைவராக விளங்கியவர் இப்ராஹீம் ரைசி

அரபு உலகின் ஓர் துணிச்சல் மிக்க, சிறந்த கல்வியறிவைக் கொண்ட தலைவர் ஈரான் ஜனாதிபதியாகவிருந்த இப்ராஹீம் ரைசி ஆவார். அவர் பலஸ்தீனர்களின் படுகொலைகளை நேரடியாக கண்டித்து வந்தவர். தனது நாட்டினை ஓர் ஒழுக்க இஸ்லாமிய நாடாக உருவாக்க முற்பட்டவர். விஞ்ஞானம் தொழில்நுட்பத்துறையில் முன்னணியில் திகழும் நாடாக ஈரான் விளங்கி வருகின்றது.

காலம் சென்ற ஈரான் ஜனாதிபதி இப்ராஹீம் ரைசி நவம்பர், 1960 ஆம் ஆண்டு இஸ்லாமிய மார்க்கப் பற்றுள்ள ஓர் குடும்பத்தில் பிறந்தார். 1978 இல் ஆயத்துல்லா கொமெய்னி புரட்சியில் இணைந்து தீவிரமாக ஈடுபட்டார்.

தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் பயின்ற அவர் சட்ட வல்லுநராக தன்னை நெறிப்படுத்தினார். 1980 களில் மாவட்ட சட்டத்தரணியாக செயற்பட்டார். 1985 இல் பிரதி சட்ட வல்லுநராக தெஹ்ரானில் கடமையாற்றினார். 1989 - 1994 வரை பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஆக



செயல்பட்டு 1994-2004 வரை தெஹ்ரானின் பரிசோதக நாயகமாக கடமையாற்றினார்.

2004-2014 பிரதி நீதிபதி, 2004-2005 சட்ட ஆணையாளர் நாயகம் ஆகிய கடமைகளை ஆற்றி உச்சநீதிமன்றத்தின் பிரதம நீதியரசராகவும் கடமையாற்றியுள்ளார்.

1975 இல் தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் கல்வியில் சட்டம் தொழில்நுட்பம் சம்பந்தமான இணை பேராசிரியராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

2016 இல் அரசியல் கட்சியான இஸ்லாமிய புரட்சி படையினர் கட்சியின் தலைவராக செயல்பட்டு தேர்தலில் போட்டியிட்டுள்ளார். 2021 ஜூன் இல் 63வீத வாக்குகளை (18 மில்லியன்) பெற்று ஈரான் குடியரசின் 13 ஆவது ஜனாதிபதியாக இப்ராஹீம் ரைசி தெரிவு செய்யப்பட்டார்

இவர் மிகவும் இஸ்லாமிய மார்க்க பக்தி கொண்டவர். அவரது மனைவி ஓர் விஞ்ஞானியாவார். இரண்டு மகள்மார் உள்ளனர். இவர்களும் பல்கலைக்கழக கல்வி கற்று தேர்ந்தவர்களாக உள்ளனர்.

அண்மையில் உமா ஓயா நீர்த்தேக்க திட்டம் திறந்து வைப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அதேவேளை கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜும்மா பள்ளிவாசலுக்கு வருகை தந்து தொழுகை நடத்தினார்.

ஈரான் ஜனாதிபதி அங்கு உரையாற்றும் போது, உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னிலை வகிக்கும் ஓர் நாடாக ஈரான் வளர்ந்து வருவதாக தெரிவித்தார்.

இலங்கையின் உமா ஓயா திட்டம் போன்று மேலும் 21 நாடுகளில் ஈரான் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் குடிநீர்த் திட்டம், நீர் மின்சாரத் திட்டம், நீர்த்தேக்கங்களை விவசாய உற்பத்திக்கு திசைதிருப்புதல் போன்ற திட்டங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் அவர் தனது தலைவர் அயத்துல்லா கொமெய்னியின் ஆதங்கமாக இருந்த பலஸ்தீன் புனித பூமியை மீட்டெடுத்து பலஸ்தீன் ஓர் சுதந்திர நாடாக திகழ வேண்டும் என குறிப்பிட்டார்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# துரித கதியில் அபிவிருத்தியடைந்து வரும் அட்டாளைச்சேனை சம்புக்களப்பு பிரதேசம்

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் சம்புக்களப்பு பிரதேசம் முக்கியம் வாய்ந்தது. அட்டாளைச்சேனை – ஆலம்குளம் பிரதான பாதையாக விளங்கும் சம்புக்களப்பு பிரதேசத்திலயே வளம் கொழிக்கும் நெற்காணிகள் உள்ளன. அட்டாளைச்சேனை பிரதேச நெற்காணிகளின் பிரதான வடிச்சல் பாதையும் இதுவே.

நீண்டகால வரலாற்றைக் கொண்ட சம்புக்களப்புப் பிரதேசம் இன்று பொதுமக்களின் விருப்பத்திற்கமைவாக அபிவிருத்தி கண்டு வருகின்றது. எதிர்காலத்திலும் அபிவிருத்திகளுக்கான வியூகங்கள் வகுக்கப்பட்டுள்ளமை தெளிவாகும்.

அரசாங்கம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்திய ஐ வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சம்புக்களப்பு வீதி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இத்திட்டத்தில், குறித்த வீதி, சீரான போக்குவரத்துக்கேற்ற வகையில் அகலமாகக்கப்பட்டு, காபர்ட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

அக்கரைப்பற்று – கல்முனை பிரதான வீதியிலிருந்து, மேற்கு நோக்கி அட்டாளைச்சேனை பாவங்காய் ஜலால்டீன் வீதி, மீலாத்நகர், சம்புக்களப்பு, சம்புநகர், ஆலம்குளம், விவசாயக் கிராமங்களை ஊடறுத்து அம்பாறை அக்கரைப்பற்று பிரதான வீதியை சென்றடையும் இவ்வீதியில், சீரான மின்சார வசதியின்றி பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நெற்காணிகளுக்கு போக்குவரத்துச் செய்யும் பிரதான பாதையாகவும், நெல் உட்பட விவசாய அறுவடைகளை வீடு கொண்டு வந்து சேர்க்கும் அல்லது சந்தைப்படுத்தும் பிரதான போக்குவரத்து மார்க்கமாகவும் இவ்வீதி பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் அக்கரைப்பற்றுச் சாலையினால் ஆலம்குளம் கிராமத்துக்கான பஸ் போக்குவரத்துச் சேவையும் இவ்வீதியில் ஏற்கனவே ஆரம்பித்து நடைமுறைப் படுத்தப்பட்டது. அட்டாளைச்சேனை பிரதேச சபையின் கொள்களமும் இப்பிரதேசத்திலயே அமைந்துள்ளது.

இவ்வாறு முக்கியத்துவமிக்க இவ்வீதியில் மின்சார வசதியின்மையினால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர், இரவுவேளைகளில் காட்டு யானைகளின் அச்சமும் எதிர்கொள்ளப்பட்டது.



தற்பொழுது, 1.6 கிலோமீற்றர் நீளமான வீதிக்கு அட்டாளைச்சேனை பிரதேச சபையினால் 2.8 மில்லியன் ரூபா செலவில் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டு, தெருமின்விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. இதனை பொது மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைச் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் தலைமையில் நடைபெற்ற மின்சாரம் வழங்கல் வேலைத்திட்டத்தினை தேசிய காங்கிரஸ் கட்சி தேசியத் தலைவரும், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இவ்வைபவத்தில், கிழக்கு மாகாண முதலமைச்சின் ஓய்வுநிலை செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, உதவிப் பிரதேச செயலாளர்கள், அட்டாளைச்சேனை ஜூம்மாப் பெரிய பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.ஹனிஸ், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், அரச உயரதிகாரிகள், தேசிய காங்கிரஸ் கட்சியின் மாவட்ட மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட அதிகமானவர்கள் கலந்து சிறப்பித்தனர்.





பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, முக்கியத்துவமிக்க இவ்வீதி மின்சார இணைப்புக்கு உதவிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ், பிரதேச சபைச் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் மற்றும் அரச அதிகாரிகள், அரசியல் பிரமுகர்களுக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவித்து நிகழ்வில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# வங்கக் கடலில் உருவெடுக்கும் புயல்!



வங்கக்கடலில் ரிமெல் புயல் சின்னம் உருவாகி வருவதால் சென்னைக்கு வானிலை ரீதியாக சில பாதிப்புகள் ஏற்பட உள்ளன. சென்னை மக்கள் விரும்பாத பாதிப்பாக அது இருக்க வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்நாட்டில் கோடை காலத்திற்கு இடையே கடுமையாக மழை பெய்து வருகிறது. அதன்படி 3 நாட்களுக்கு கன மழைக்கான எச்சரிக்கை தமிழ்நாட்டிற்கு விடுக்கப்பட்டு உள்ளது.

இந்த மழைக்கு இடையே திடீரென வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி வருகிறது. அடுத்த வாரம் திங்கள், செவ்வாய் அளவில் இந்த தாழ்வுக்கு பகுதி புயலாக மாறும் வாய்ப்புகள் உள்ளன. இதற்கு ரிமெல் என்று பெயர் வைக்கப்பட்டு உள்ளது. அடுத்த வாரம் இந்த தாழ்வு பகுதி புயலாக மாறி அதன் பின் டெல்டா டூ தென் மாவட்டங்கள் வரை மொத்தமாக பரவலாக மழையை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கக்கடலில் ரிமெல் புயல் சின்னம் உருவாகி வருவதால் இந்த புயல் மேற்கு நோக்கி நகரும். இதனால் புயல் ஈரமான காற்றை எடுத்துக்கொண்டு செல்லும். இதை நிரப்ப சூடான காற்று வங்கக்கடலை நோக்கி செல்லும். இதன் காரணமாக சென்னைக்கு வெப்ப அலை மீண்டும் வரும். முக்கியமாக சென்னைக்கு மீண்டும் சூடு ஏற்படும். இந்த மாத இறுதியில் சென்னையில் மீண்டும் வெயில் இதனால் அதிகரிக்கும்.

பொதுவாக ஒரு சுழற்சி கடலுக்கு மேலே இருக்க வேண்டும். இது வெப்பநிலை காரணமாக வலிமை அடைந்து



தாழ்வு மண்டலமாக மாறும். இந்திய தாழ்வு மண்டலம் வலிமை அடைந்து புயல் ஏற்பட கடலின் மேல் வெப்பநிலை 26 டிகிரி செல்சியசுக்கு மேல் இருக்க வேண்டும். அதாவது வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஏற்படுகிறதே, அதன் மையத்தில் இந்த வெப்பநிலைக்கு மேல் இருக்க வேண்டும்.

அல்லது காற்றழுத்த தாழ்வு பகுதியின் மையத்தில் இதை விட அதிக வெப்பநிலை இருக்க வேண்டும். அந்த வெப்பநிலை இருந்தால் மட்டுமே புயலுக்கு சாதகமான சூழ்நிலை நிலவும். தற்போது கோடைகாலம் என்பதால் இந்த சூழ்நிலை சரியாக உள்ளது.

அதேபோல் கடலுக்கு நடுவே நிலத்தில் இருந்து இன்னும் நீண்ட தூரத்தில் இருந்தால் கண்டிப்பாக இது புயலாக மாறு. எவ்வளவுக்கு எவ்வளவு பூமியில் இருந்து தூரத்தில் இருக்கிறதோ அவ்வளவு நல்லது. அப்போதுதான் அது முழுதாக உருவாக முடியும்.

ஒரு காற்றழுத்த தாழ்வு மண்டலம் பூமிக்கு அருகில் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். இது முழுமையாக உருவாகும் முன் அது கரையை கடக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதனால் பல தாழ்வு மண்டலங்கள் புயலாக மாறாமல் போய் இருக்கின்றன. அதேபோல் இன்னொரு விஷயம் வறண்ட காற்று. இந்த வறண்ட காற்று பொதுவாக தாழ்வு மண்டலம் உருவாக விடாமல் தடுக்கும். வறண்ட காற்று காரணமாக தாழ்வு மண்டலம் வேகமாக வலிமை இழக்கும். குளிர்ந்த காற்று இருந்தால் தாழ்வு மண்டலம் வேகமாக வலிமை அடையும்.

வரண்ட காற்று என்பது தாழ்வு மண்டலத்தை செயல் இழக்க செய்யும், ஆக்ரோஷத்தை குறைக்கும் ஒன்றாகும். கடந்த வாரம் உருவான வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக வந்த குளிர்ந்த காற்று புயலுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கிவிட்டது. இந்த விஷயங்கள்தான் பொதுவாக ஒரு புயல் உருவாவதற்கான சூழ்நிலையை தீர்மானிக்கும். இந்த விஷயங்கள் சாதகமாக அமைந்தால் புயல் உருவாவதற்கான ஏற்ற சூழ்நிலைகள் இருக்கும். வங்கக்கடலில் இந்த எல்லா விஷயங்களும் தற்போது புயலுக்கு சாதகமாக உள்ளது. இதனால் அந்த புயல் உருவாக வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

# பிரதமர் நரேந்திர மோடி மீது கட்சிக்குள் பலர் எதிர்ப்பு!



ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் பிரதமர் மோடிக்கு எதிராக பலர் அதிருப்தியில் இருக்கிறார்கள். பாஜக தலைவர்களை மோடி ஒதுக்கி வருவதை ஆர்எஸ்எஸ் விரும்பவில்லை. அதனால்தான் இந்த முறை ஆர்எஸ்எஸ் தேர்தல் பணிகளை செய்யவில்லை. மோடியை ஆர்எஸ்எஸ் விரும்பவில்லை என்று மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆர்எஸ்எஸ் - பாஜக இடையே உரசல் நிலவுவதாக வந்துள்ள செய்திகளுக்கு இடையே பாஜக தலைவர் ஜேபி நட்டா, ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், ஆர்.எஸ்.எஸ்ல் இருந்து பாஜக கட்சி தனியாக சுதந்திரமாக வளர்ந்துள்ளதாகவும், இனி ஆர்எஸ்எஸ் அமைப்பிடம் கையேந்த வேண்டிய அவசியமில்லை என்றும் கூறியுள்ளார்.

பாஜகவின் தேசிய தலைவரே இப்படி நேரடியாக ஆர்எஸ்எஸ் பற்றி குறிப்பிட்டு இருப்பது தேசிய அரசியலில் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது. முக்கியமாக 2024 லோக்சபா தேர்தலுக்கு நடுவில் இந்த பேச்சு வந்திருப்பதுதான் அதிக விவாதத்தை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசத்தில் இருந்து பாஜகவிற்கு சில அதிர்ச்சி அளிக்கும் தகவல்கள் வர தொடங்கி உள்ளதாக கூறப்படுகிறது. இதுதான் ஆர்எஸ்எஸ் உறவை பாஜக முறிக்க காரணம் என்றும் கூறப்படுகிறது.

பத்தாண்டுகள் மத்தியில் பாஜகவும், உத்தரபிரதேசத்தில் ஏழு ஆண்டுகளும் ஆட்சியில் இருந்த நிலையில், ஆர்எஸ்எஸ் வட்டாரங்களில் பாஜக மீது அதிருப்தி ஏற்பட்டு உள்ளது. மத்திய, மாநில அரசாங்கம் "அவர்களுடையது" என்ற போதிலும், தற்போது உத்தர பிரதேசத்தில் ஆர்எஸ்எஸ் பணியாளர்கள் பெரிதாக தேர்தல் பணிகளை செய்யவில்லை என்று கூறப்படுகிறது.

ஆர்எஸ்எஸ் பாஜக இடையே நடக்கும் மோதல் தொடர்பாக மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன் பேட்டி அளித்துள்ளார்.

"பாஜகவில் மோடிக்கு எதிராகவே வேலை செய்கிறார்கள். ஆர்எஸ்எஸ் அமைப்பில் மோடிக்கு எதிராக அதிருப்தியில் இருக்கிறார்கள். மோடிக்கு எதிராக திட்டமிட்டு வேலை பார்க்கிறார்கள். மோடியை தோற்கடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு வேலை பார்க்கிறார்கள். பாஜகவில் சிறந்த தலைவர் வாஜ்பாய். ஆனால் அவர் தன்னை முன்னிறுத்தியது இல்லை. ஆனால் மோடி தன்னை முன்னிறுத்துகிறார். இப்போதும் கூட அவர் தன்னை முன்னிறுத்துக்கொள்கிறார். பாஜகவிலேயே இதை பலரும் விரும்பவில்லை. மோடி தன்னை மட்டும் முன்னிறுத்துவதை பாஜகவிலேயே சிலர் விரும்பவில்லை. இதனால்தான் பாஜகவில் மோடிக்கு எதிராகவே வேலை செய்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

# ஓந்தாச்சிமடம் மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து உதவி

அவுஸ்திரேலியாவில் வாழும் ஓந்தாச்சிமடம் பழைய மாணவர்களால் ஓந்தாச்சிமடம் விநாயகர் மகாவித்தியாலயத்தில் பயிலும் சகல மாணவர்களுக்கு பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி மதிவதனி பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதிகளாக பட்டிருப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.துவிதரன், சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நன்கொடை அதிதியாக நன்கொடையாளர் சார்பாக அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த சமூக சேவையாளர் பழைய மாணவர் ரி.சௌந்தரராஜன், திருமதி றோஜினி சௌந்தரராஜன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ அதிதிகளாக பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி அ.சற்குணராஜா மற்றும் ஆசிரியர்





முத்தையா ஜெயாதி ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். உதவி வழங்கிய அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

சாதனை படைத்த மாணவர்களுக்கு விசேட பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவிலிருந்து வயிரமுத்து அழகையா, முத்தையா மாறன், கோபாலபிள்ளை ஜனபாலசந்திரன், தெய்வநாயகம் சௌந்தரராசன், கோபாலன் ரவீந்திரன், நடராசமணி கனகராஜ்,

செல்வராசா சுதர்சன், யோகலிங்கம் உமாகாந்தன், கிருபைராசா அமரதாஸ்,அருணாசலம் இன்பநாதன் ஆகிய பத்து பழைய மாணவர்கள் இந்த பாரிய கல்வி ஊக்குவிப்பு உதவித் திட்டத்திற்கு ஒன்பது இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**காரைதீவு குறூப் நிருபர்...✍**

# காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கு கிடைத்த அரிய வாய்ப்பு

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில் கல்வி பயிலும் மிகவும் வசதி குறைந்த மாணவர்கள் தமது குடும்ப பொருளாதார கஷ்ட நிலை காரணமாக தமது வாழ்நாளில் வசதி படைத்த மாணவர்கள் அனுபவிப்பது போன்று கல்விச் சுற்றுலா மேற்கொண்டு யாழ்ப்பாண பிரதேசத்திற்கு அப்பால் செல்ல முடியுமா என்று ஏங்கிக் கொண்டிருந்தனர்.

நுவரெலியா போன்ற குளிரான பிரதேசத்திற்குச் சென்று இயற்கைக் காட்சிகளை காணக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற ஏக்கத்தில் அவர்கள் இருந்தனர்.





இக்கல்லூரியில் கல்வி கற்ற லண்டன் பழைய மாணவர்கள் இம்மாணவர்களின் ஏக்கத்தை நிறைவு செய்யும் வகைகள் மலையக சுற்றுலாவிற்கான முழுச்செலவையும் வழங்கியிருந்தனர்.

இந்த வாய்ப்பை வழங்கிய லண்டன் பழைய மாணவர்களுக்கு சுற்றுலா சென்ற மாணவர்களின் பெற்றோர் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...✍** (மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# அமைச்சின் மேலதிக செயலாளராக சசிதேவி ஜலதீபன் பதவியேற்பு



திருமலை முன்னாள் பிரதேச செயலாளர் திருமதி சசிதேவி ஜலதீபன் பொதுநிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளராக பதவியேற்றுள்ளார்.

2003 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவையில் இணைந்து கொண்ட திருமதி சசிதேவி ஜலதீபன் இலங்கை நிருவாக சேவையின் அதி விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட நிலையில், பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளராக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் முன்னதாக திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவினதும், பொலநறுவை மாவட்டத்தின் திபுலாகல பிரதேச செயலகப் பிரிவினதும் பிரதேச செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

தேசிய கொள்கைகள் பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, இளைஞர் விவகார வடக்கு அபிவிருத்தி அமைச்சினதும், நிதி மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறு சீரமைப்பு இராஜாங்க அமைச்சினதும் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பதவி வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மோடியை சிம்மாசனமேற்றிய அத்வானிக்கு ஆசனத்தில் அமருவதற்கு வாய்ப்பு இல்லை!



அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படுவதற்கு வித்திட்டவர் அத்வானி. ஆனால், பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இராமர் கோயில் திறப்புவிழாவுக்கு அத்வானி அழைக்கப்படவில்லை. மோடியை குஜராத் முதல்வராக்கியதில் அத்வானிக்கு மிகப்பெரிய பங்கு உண்டு.

இந்தியாவின் அரசியல் போக்கை மாற்றியதில் பா.ஜ.கவின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானிக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. பா.ஜ.க அரியணை ஏறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் எல்.கே.அத்வானி.

இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கிவரும் எல்.கே.அத்வானிக்கு தற்போது 96 வயதாகிறது. இவர், தற்போது பாகிஸ்தானில் இருக்கும் கராச்சியில் 1927 ஆம் ஆண்டு, நவம்பர் 8 ஆம் திகதி பிறந்தவர். இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பு, ஒன்றுபட்ட இந்திய தேசத்தில் பிறந்து வளர்ந்த எல்.கே.அத்வானி, கராச்சியிலுள்ள புனித பேட்ரிக் உயர்நிலைப்பள்ளி என்ற கிறிஸ்தவப் பாடசாலையில் படித்தார்.

கிறிஸ்தவப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே, அவரது சிந்தனை இந்துத்துவா கொள்கைகளால் நிரம்பியிருந்தது. பாடசாலை மாணவராக இருந்த காலத்திலேயே அவருக்கு ஆர்.எஸ்.எஸ் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது. கல்லூரிப் படிப்பையும் கராச்சியில் முடித்தார். இந்தியா_ பாகிஸ்தான் பிரிவினையின்போது, இவரின் குடும்பம் இந்தியாவுக்கு வந்து, மும்பையில் குடியேறியது. மும்பை சட்டப் பல்கலைக்கழகத்தில் அவர் சட்டம் படித்தார்.

மும்பைக்கு வந்த பிறகு ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துடன் நெருக்கம் அதிகமானது. ராஜஸ்தானில் ஆர்.எஸ்.எஸ். பணிக்கு அவர் அனுப்பிவைக்கப்பட்டார். 1951 ஆம் ஆண்டு, ஆர்.எஸ்.எஸ். ஆலோசனையின் பேரில் 'ஜன சங்கம்' தோற்றுவிக்கப்பட்டது. அதன் பொதுச்செயலாளராக இருந்த எஸ்.எஸ்.பண்டாரியின் செயலாளராக எல்.கே.அத்வானி நியமிக்கப்பட்டார். 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மூன்று மக்களவைத் தொகுதிகளில் ஜன சங்க வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர்.

அந்தச் சூழலில், நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பான செயல்பாடுகளுக்காக 1957 ஆம் ஆண்டு எல்.கே.அத்வானி டெல்லிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அடுத்த சில ஆண்டுகளில், ஜன சங்கத்தின் பொதுச்செயலாளராக ஆனார் எல்.கே.அத்வானி. இப்படியாக, தேசிய அரசியலில் எல்.கே.அத்வானியின் பதவி உயர்ந்துகொண்டே போனது.

அந்த வேளையில்தான், 1977 ஆம் ஆண்டு இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசு, திடீரென அவசரகாலவிதியை அறிவித்தது. அதன் பிறகு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் அத்வானி வெற்றிபெற்றார். மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதா ஆட்சி அமைந்தது.

1977 முதல் 1979 வரையிலான மொரார்ஜி தேசாய் அமைச்சரவையில் தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சராக எல்.கே.அத்வானி இருந்தார்.

ஜன சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றுசேர்ந்து, 1980 ஆம் ஆண்டு பா.ஜ.க எனப்படும் பாரதிய ஜனதா கட்சியைத் தோற்றுவித்தனர். அதன் தலைவராக அடல் பிஹாரி வாஜ்பாய் நியமிக்கப்பட்டார். என்றாலும், வாஜ்பாய்க்கு நிகரான தலைவராக இருந்தார் எல்.கே.அத்வானி. அப்போது, தேசிய அளவில் பா.ஜ.கவின் முகங்களாக எல்.கே.அத்வானியும், அடல் பிஹாரி வாஜ்பாயும் இருந்தனர். 1980களில் எல்.கே.அத்வானியின் பெயர் தேசம் முழுவதும் பிரபலமானது. வளர்ச்சியின் ஆரம்பக்கட்டத்தில் இருந்த பா.ஜ.க, 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

அடுத்த 15 ஆண்டுகளில், அதாவது, 1998 ஆம் ஆண்டு மத்தியில் ஆட்சியதிகாரத்தைப் பிடிக்கும் அளவுக்கு அசுர வளர்ச்சியை பா.ஜ.க அடைந்தது. அந்த வளர்ச்சிக்கு காரணகர்த்தவாக இருந்தவர் எல்.கே.அத்வானி.


பா.ஜ.கவின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது அயோத்தியை நோக்கி அத்வானி நடத்திய ரதயாத்திரை. 1989 ஆம் ஆண்டு கட்சியின் தலைவராக இருந்த அத்வானி, அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதை பா.ஜ.கவின் நிகழ்ச்சி நிரல்களில் ஒன்றாக மாற்றினார். பாலம்பூரில் நடைபெற்ற பா.ஜ.கவின் தேசிய செயற்குழு கூட்டத்தில் இந்த திட்டத்தை முதன்முதலில் அவர் இணைத்தார்.

அதன் பிறகுதான், அயோத்தியை நோக்கி ரதயாத்திரையை அவர் தொடங்கினார். அயோத்தியில் 300 ஆண்டுகள் பழைமையான பாபர் மசூதியை இடித்துவிட்டு, அந்த இடத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்பதுதான் ரதயாத்திரையின் நோக்கமாக இருந்தது.

1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை அமுல்படுத்த முடிவுசெய்தார் அன்றைய பிரதமர் வி.பி.சிங். அது, இடஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டமாக வெடித்தது.

அந்தச் சூழலில்தான், இராம ஜென்மபூமி என்ற கோஷத்தை பா.ஜ.க தீவிரமான முன்னெடுத்து, 1990 ஆம் ஆண்டு குஜராத்திலிருந்து அயோத்தியை நோக்கி அத்வானி தலைமையில் ரத யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. அத்வானியின் ரத யாத்திரை பல இடங்களில் வன்முறைக்கு வித்திட்டதாக புகார்கள் குவிந்தன.

## பா.ஜ.கவில் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்ட தலைவர்!



கடைசியில், திட்டமிட்டபடி 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி கரசேவகர்களால் பாபர் மசூதி தகர்க்கப்பட்டது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி உள்ளிட்டோர் மீது கிரிமினல் சதி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பல ஆண்டுகளாக இந்த வழக்கு நடைபெற்றுவந்தது. 2020 ஆம் ஆண்டு, அத்வானி உள்ளிட்டோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

மத்தியில் பா.ஜ.க ஆட்சியைப் பிடிக்க அனைத்துக் காரணமாக இருந்த அத்வானியால், அதன் பலனை அறுவடை செய்ய முடியவில்லை. 1998 ஆம் ஆண்டு மத்தியில் பா.ஜ.க ஆட்சியைப் பிடித்தபோது, எல்.கே.அத்வானிதான் பிரதமராக ஆகியிருக்க வேண்டும். ஆனால், பிரதமர் நாற்காலியில் அமரவைக்கப்பட்டார் அடல் பிஹாரி வாஜ்பாய்.

'பா.ஜ.கவில் இரும்பு மனிதர்' என்ற இமேஜ் அவரது கட்சியினர் மத்தியில் அத்வானிக்கு உண்டு. ஆனால், குஜராத் வன்முறைக்குப் பிறகு, பா.ஜ.கவுக்கு உள்ளேயும், ஆர்.எஸ்.எஸ் இயக்கத்துக்கு உள்ளேயும் அத்வானியைப் பார்க்கிலும் மோடியின் செல்வாக்கு உயர ஆரம்பித்தது. ஆகையால், 2014 இலும் பிரதமராகும் வாய்ப்பை அத்வானி இழந்தார். பிரதமர் வேட்பாளராக மோடி முன்னிறுத்தப்பட்டார்.

அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படுவதற்கு வித்திட்டவர் அத்வானி. ஆனால், பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இராமர் கோயில் திறப்புவிழாவுக்கு அத்வானி அழைக்கப்படவில்லை. மோடியை குஜராத் முதல்வராக்கியதில் அத்வானிக்கு மிகப்பெரிய பங்கு உண்டு.

1991ஆம் ஆண்டு, குஜராத்தின் சோம்நாத்திலிருந்து அயோத்தி வரை ரதயாத்திரையைத் தொடங்கியபோது, குஜராத்தில் அந்த யாத்திரைக்காக ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பை கவனித்துக் கொண்டவர் நரேந்திர மோடி.

அப்படியிருக்கும்போது, இராமர் கோயில் திறப்பு விழாவுக்கு அத்வானியை மோடி அழைக்கவில்லை என்பது பெரும் புகாராக வெடித்தது. அயோத்தியில் கடந்த ஜனவரி 22 ஆம் திகதி மிகப்பிரமாண்டமாக இராமர் கோயில் திறப்புவிழா நடைபெற்றது. ராகுல் காந்தி, சீதாராம் யெச்சூரி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களுக்கெல்லாம் கூட, விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தார்கள்.

எல்லா மாநிலங்களில் இருந்தும் முக்கிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டனர். வெளிநாடுகளிலிருந்துகூட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆனால், இராமர் கோவில் இயக்கத்தை முன்னெடுத்ததில் முக்கிய முகமாக இருந்த அத்வானியை அழைக்காமல் புறக்கணித்து விட்டார்கள்.

அத்வானி ஏன் அழைக்கப்படவில்லை என்பது பிரதமர் மோடிக்கே வெளிச்சம்.

ஆனாலும், அத்வானிக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னாவை பா.ஜ.க அரசு வழங்கியிருக்கிறது.

'நம் காலத்தில் மிகவும் மதிக்கப்படும் அரசியல்வாதிகளில் ஒருவரான எல்.கே.அத்வானி, இந்தியாவின் வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பு மகத்தானது' என்று புகழாரம் சூட்டினார் பிரதமர் நரேந்திர மோடி.

அத்வானிக்கு 'பாரத ரத்னா' வழங்கப்பட்டதில், பா.ஜ.கவில் இருக்கும் அவரது ஆதரவாளர்கள் அகமகிழ்ந்திருக்கிறார்கள். பாரத ரத்னா வழங்கியதற்காக மோடிக்கு மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்திருக்கிறார்கள் அத்வானி குடும்பத்தினர்.

எனினும் இது தேர்தல் நெருக்கத்தில் அதிருப்தியை சமாளிக்க கொடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இன்று பா.ஜ.க பெற்றிருக்கும் பெரும் வளர்ச்சிக்கு, பலமான அத்திவாரம் இட்டதில் முக்கியமானவராக இருந்தவர் அத்வானி.

## யாழ்ப்பாணம் வைத்தியசாலை...

விஞ்ஞான பாடங்களை அடிப்படையாக கொண்ட இந்த நாட்டில் உள்ள அனைத்து பீடங்களும் தற்போது பழைய தொழில்நுட்பத்தை கொண்டுள்ளதாகவும், புதிய உலகுக்கு ஏற்றவகையில் இந்த தொழில்நுட்பத்தை மாற்றியமைக்க வேண்டுமெனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பிள்ளைகள் தமது திறமையை வெளிப்படுத்துவது இந்த நுட்பத்தைப் கற்பதன் மூலம் அல்ல. அது அவர்களின் அறிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்பதை மேலும் சுட்டிக்காட்டிய அவர், புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்நாட்டில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார். விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து இது தொடர்பான பரிந்துரைகளை தயாரித்து தமக்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இதன்போது பணிப்புரை விடுத்தார்.

மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டிடம், 46 வருடங்களின் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கட்டிடம் இதுவாகும். இதற்காக 942 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் துறை கட்டிடம் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவப் பயிற்சிக்காக 1,200 மாணவர்களுக்கு இடமளிப்பதுடன் சர்வதேச ஆராய்ச்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க உதவுகிறது. 6,000 சதுர மீட்டர் கட்டிடத்தில் பல விரிவுரை நிலையங்கள், மருத்துவ திறன்கள் ஆய்வகங்கள் மற்றும் கேட்போர் கூடமும் உள்ளது. அறுவை சிகிச்சை நிலையங்கள், மீட்பு அறைகள், சுத்தம் செய்யும் பகுதிகள், அகற்றல் பகுதிகள், ஸ்டெரிலைசேஷன் பிரிவுகள், தயார்ப்படுத்தல் அறைகள் மற்றும் களஞ்சிய வசதிகள் ஆகியவையும் இதில் உள்ளடங்கும்.

நோயாளிகள் தங்கும் அறைகள், ஆலோசனை அறைகள் மற்றும் எண்டோஸ்கோபி, வாஸ்குலர் அறுவை சிகிச்சை மற்றும் மேமோகிராபிக்கான சிறப்புப் பிரிவுகள், ஆராய்ச்சி ஆய்வகங்கள், தடயவியல் விசாரணைப் பிரிவு மற்றும் அருங்காட்சியகம் ஆகியவையும் இதில் அடங்கும்.

மகப்பேற்று மருத்துவத் துறையால் நிர்வகிக்கப்படும், கருவுறுதல் பராமரிப்புப் பிரிவு சிறப்பு ஆலோசனைகள், நோயறிதல் சேவைகள் மற்றும் சிகிச்சை வசதிகள் உள்ளிட்ட விரிவான சேவைகளை வழங்கும். மருத்துவ பரிசோதனை பிரிவு (CTU) உள்நாட்டில் அறியப்பட்ட நோய்களுக்காக குறைந்த செலவில் செய்யக்கூடிய சிகிச்சைகள் பற்றிய மருத்துவ ஆராய்ச்சிக்கு வசதிகள், மருத்துவ மரபியல் பிரிவு (CGU) மரபணு நோயறிதல் மற்றும் நோயாளர் பராமரிப்பு வசதிகளுடன் நோய் தடுப்புக்கான அறிவையும் வழங்கும். பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து புதிய கட்டிடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, புதிய கட்டிடத்தை மேற்பார்வையிட்டார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க: "யாழ்.மாவட்டத்திற்கு தேசிய வைத்தியசாலையை வழங்குமாறு நீங்கள் அனைவரும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தீர்கள். கராப்பிட்டிய வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கு கடந்த வாரம் அமைச்சரவையில் அனுமதி வழங்கினோம். அத்துடன், யாழ்ப்பாண வைத்தியசாலையை அடுத்த தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர்தர சுகாதார சேவையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அப்போது கொழும்பில் மாத்திரமன்றி தெற்கு, வடக்கு, மற்றும் மத்திய மாகாணங்களிலும் சிறந்ததொரு வைத்தியசாலைக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். அத்தோடு நின்று விடாமல் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஏனைய பகுதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நான் அடிக்கடி யாழ். மாவட்டத்துக்கு வருகை தருவதாக இங்கு குறிப்பிடப்பட்டது. உண்மையில் நான் இந்த முறை இங்கு வைத்தியசாலைகளை திறப்பதற்காக வந்தேன். நான் ஒரு நீண்ட வார இறுதி விடுமுறையில் வந்துள்ளேன். அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். நான் கடந்த முறை இங்கு வருகை தந்தபோது, நெதர்லாந்துத் தூதுவர் இந்த இரண்டு புதிய மருத்துவமனைகளைத் திறப்பதற்கு இங்கு வருமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார். அதனால் இந்த வார இறுதியில் இங்கு வந்து இந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்யத் தீர்மானித்தேன்.

யாழ்ப்பாண மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியின் பலனை அனுபவிக்கவில்லை. வருமானம் போதியளவில் இல்லை. மக்கள் வேலைத் தேடும் நிலை காணப்படுகிறது. யாழ்.மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான அநேகமான சாத்தியங்கள் உள்ளன. யாழ். மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட சில பிரச்சினைகளை எம்மால் தீர்க்க முடிந்துள்ளது. தடுப்புக்காவலில் உள்ள கைதிகள் தொடர்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன.

எங்களால் இன்னும் இதனை முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அதற்கான தீர்வுகள் தற்போதுள்ள அரசியல் பிரச்சினைகளைச் சுற்றியே உள்ளன. நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல், காணாமல் போனோர் விவகாரம், இழப்பீடுகள், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே நேரம் என்று நான் நம்புகிறேன். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சித்து வருவதோடு, வடகிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளேன்.

முன்னைய ஆணைக்குழு அறிக்கைகள் அனைத்தையும் ஆராய்ந்து தொகுக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கை அண்மையில் எமக்கு கிடைத்தது. இந்த அனைத்து ஆணைக்குழு அறிக்கைகளின் தாய் அறிக்கையாகவும், இது தொடர்பான கடைசி ஆணைக்குழு அறிக்கையும் அதுவாகவே இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதற்காக மற்றுமொரு ஆணைக்குழுவின் அவசியம் இல்லை.

காணாமல் போனோர் அலுவலகம் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்ற அவர்களின் பரிந்துரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை அப்படியே செய்ய வேண்டும். காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான முழுப் பிரச்சினைக்கான தீர்வுகளிலும் மாற்றங்கள் செய்வதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பொருளாதார நெருக்கடியால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, எங்களால் அதிகளவு இழப்பீடு தொகையை செலுத்த முடியவில்லை. எனவே அதற்காக பணம் ஒதுக்க வேண்டும். அத்துடன் எது உண்மை, என்ன நடந்தது, நல்லிணக்கத்துக்காக நாம் என்ன செய்கிறோம் என்ற கேள்விக்குறி காணப்படுகிறது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை (TRC) கொண்டு வருவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. ஆனால் நீதிமன்ற அதிகாரம் குறித்த பிரச்சினைகள் அதற்குள் காணப்படுகிறது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் நீதித்துறை அதிகாரங்கள் எமக்கு இருக்க வேண்டுமா அல்லது அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீதித்துறை அதிகாரங்களைச் செயற்படுத்தும் தனி நீதிமன்றம் வேண்டுமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். மேலும் இந்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனவே, இது குறித்து அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை சட்டமாக்குவதற்கு எமக்கு ஆதரவளித்த மூன்று தூதுவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்குமாறு இரண்டு அமைச்சர்களுக்கும் அறிவித்துள்ளேன். இதன் மூலம் பல பிரச்சினைகள் தீரும் என நம்புகிறேன். எனவே, இதுபற்றி கலந்துராயடி, சாத்தியமான தீர்வுகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவோம் என்று அமைச்சர்களிடம் தெரிவித்தேன்.

அத்துடன், வட மாகாணம் அபிவிருத்திக்காக சாத்தியக்கூறுகளை அதிகமாக கொண்டிருக்கிறது. இந்த மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பெருமளவில் உள்ளது. அதனால் யாழ்ப்பாணத்தை இலங்கையின் முக்கிய வலுசக்தி மையமாக கட்டியெழுப்ப முடியும். வடமாகாணத்தில் இந்த வலுசக்தியை நாம் இதுவரை பயன்படுத்தவில்லை. ஆனாலும் ஜிகாவொட்கள் அளவிலான வலுசக்தி இங்கு உள்ளது.

மேலும், நாட்டில் போட்டி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். வடக்கு மாகாணம் அதற்குள் முக்கியமான இடத்தை பிடிக்கிறது. இங்குள்ள விவசாயிகளுக்கு அதற்கான திறன் உள்ளது. இதன் மூலம் வடமாகாண மக்களின் வருமான மட்டத்தை பாரியளவில் மேம்படுத்த முடியும்.

கைத்தொழில்களைப் பொறுத்த வரையில் காங்கேசந்துறையில் முதலாவது முதலீட்டு வலயத்தை அமைப்பது குறித்தும், பின்னர் பரந்தன் மற்றும் மாங்குளத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம். மேலும் திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம். வடக்கில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறோம்.

எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள தரைமார்க்க தொடர்பின் மூலம் யாழ்ப்பாணம் உள்ளடங்களாக முழு வடக்கு மாகாணமும் புரட்சிகரமாக மாறும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வடமாகாணத்தை இலங்கையின் பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய முடியும்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் சில நடனக் அம்சங்கள் இங்கு இடம்பெற்றன. அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களில் பெரும்பாலானோர் 21 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று துணைவேந்தர் கூறினார். அதாவது 2002 மற்றும் 2003 இல் பிறந்தவர்கள். அவர்களுக்கு சிறந்த எதிர்காலம் உருவாக்கப்பட வேண்டும்.

அவர்களைத்தான் Gen Z என்று அழைக்கிறோம். அவர்கள் தங்கள் எதிர்காலத்திலம் குறித்து அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுக்கான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். இதன் காரணமாகவே புதிய பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் விரைவான அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கான சட்டங்களைக் கொண்டுவருவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதையும் கூற வேண்டும்." என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ராஜேந்திர சுரேந்திரகுமாரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கொழும்பு பங்குச்சந்தையில்...

சுட்டெண் 131.87 புள்ளிகள் அல்லது 1.08 சதவீத வளர்ச்சியை அடைந்ததுடன், அன்றைய வர்த்தகத்தின் முடிவில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மதிப்பும் 12,348.84 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

இதற்கிடையில், S&P SL20 சுட்டெண் நாளின் போது 58.18 புள்ளிகள் அல்லது 1.61 சதவீதத்தால் அதிகரித்து, நாளின் வர்த்தகத்தின் முடிவில், அதன் மதிப்பு 3,666.89 புள்ளிகளாக பதிவு செய்யப்பட்டது. மேலும், அன்றைய தினம் 1.46 பில்லியன் ரூபா பரிவர்த்தனை புரள்வு பதிவாகியுள்ளது. உள்நாட்டு கொள்வனவுகள் 1.41 பில்லியன் ரூபாவாகவும் உள்நாட்டு விற்பனை 1.35 பில்லியன் ரூபாவாகவும், வெளிநாட்டு கொள்வனவுகள் 49 மில்லியன் ரூபாவாகவும் வெளிநாட்டு விற்பனை 106 மில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளன.

கொமர்ஷல் வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி, LOLC ஹோல்டிங்ஸ், NDB வங்கி மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் ஆகியன அனைத்துப் பங்குகளின் விலைச் சுட்டெண்ணில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளன. ஹற்றன் நேஷனல் வங்கி (ரூ. 147 மில்லியன்), நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி (ரூ. 98 மில்லியன்) மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் (ரூ. 80 மில்லியன்) ஆகியவை அன்றைய சாதாரண பரிவர்த்தனைகள் மூலம் புரள்வதில் அதிக பங்களிப்பைச் செய்திருந்தன.

## மறைந்த ஈரான் ஜனாதிபதி...

ஈரானிய அதிகாரிகளின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக கடந்த 22ஆம் திகதி தெஹ்ரானுக்கு சென்றிருந்தனர். ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு வெளியுறவு அமைச்சர் இரங்கல் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கை மக்கள் சார்பாக இடைக்கால ஜனாதிபதி கலாநிதி Mohammad Mokhber மற்றும் பதில் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி அலி பகேரி கனி Dr. Ali Bagheri Kani ஆகியோரிடம் தமது அனுதாபங்களை தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த விஜயத்தின் போது வெளிநாட்டமைச்சர், ஈரான் இஸ்லாமிய குடியரசின் அதியுயர் தலைவர் கலாநிதி அயதுல்லா செயிட் அலி கமேனி (Ayatollah Dr. Seyyed Ali Khamenei) மற்றும் இடைக்கால ஜனாதிபதி கலாநிதி மொஹமட் மொக்பரிடம் (Dr. Mohammad Mokhber) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இரங்கல் செய்தியை கையளித்தார். உயர்மட்ட குழுவின் வருகையை பாராட்டிய இடைக்கால ஜனாதிபதி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இரங்கல் செய்திக்கு நன்றி தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி கலாநிதி ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் கலாநிதி அமிரப்துல்லாஹியன் ஆகியோருக்கு தெஹ்ரானில் உள்ள இஸ்லாமிய மாநாட்டு மண்டபத்தில் வெளிநாட்டு பிரமுகர்கள் மற்றும் பிற உயர்மட்ட அதிகாரிகளின் பெரும் கூட்டத்துக்கு மத்தியில் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவினர் இறுதி அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. ஈரானிய ஜனாதிபதியின் மறைவையொட்டி இலங்கையின் அரசாங்கம் கடந்த 21 ஆம் திகதியை தேசிய துக்க தினமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலேசியாவிலிருந்து...

இதற்கமைய, சட்ட விலக்குகள் மற்றும் நிதி நிவாரணம் வழங்குவதன் மூலம் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் அவர்களின் நாடுகளுக்கு திருப்பி அனுப்பபட்டு வருகின்றனர்.

இதன்போது, மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களைச் செயலாக்குவதற்கும், தேவையான பயண ஆவணங்களை வழங்குவதற்கும், மேலும் வெளியேற்றப்படுவோர் அனைவருக்கும் சுமுகமான வருவாயை உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட மலேசிய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டுள்ளது. முதியோர், கர்ப்பிணிப் பெண்கள், மருத்துவ உதவி தேவைப்படும் நபர்கள் மற்றும் பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை, இலங்கையரை திருப்பி அனுப்பும் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன், கடந்த 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் பெப்ரவரி 28ஆம் திகதி வரை, மலேசியாவில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிய 124 சட்டவிரோத குடியேற்றவாசிகள் திருப்பி அனுப்பட்டுள்ளனர். இதன் மூலமாக நாடு திரும்பியவர்களின் எண்ணிக்கை தற்போது 1,732 ஆக உயர்ந்துள்ளது.

## மாதம்பை, மஹவெவ...

ஹவான வீதியில் பிலாகட்டுமுல்ல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் மீது பலா மரம் முறிந்து விழுந்ததில் 36 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சிலாபம், மஹவெவ, மெதகொட பிரதேசத்தில் வசித்து வந்த ஹஷினி இஷார லங்கா என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், தந்தை படுகாயமடைந்து மாரவில ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை மாதம்பை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குளியாப்பிட்டி பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவரும் கடும் மழை காரணமாக வீதியோரமாக இருந்த மரத்தின் கீழ் ஒதுங்கி நின்ற போது மரத்தின் கிளையொன்று முறிந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

சூரியதென்ன, கல்முருவ பிரதேசத்தைச் சேர்ந்த நிசன்சலா சரோஜனி என்ற 39 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## தென்மேற்கு வங்கக்கடலில்...

காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்படி தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதிகளிலுள்ள மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினர் மிகவும் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது, இன்று (25) அதிகாலை 5.30 மணிக்கு வடகிழக்கு திசையை நோக்கி நகர்ந்து மத்திய வங்கக்கடலில் புயலாக உருவாகலாமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து வடக்கு நோக்கி நகர்ந்து இன்று இரவு 11.30 மணியளவில் இந்த புயல் மேலும் வலுவடையுமென திணைக்களம் குறிப்பிடுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளிலும் தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் மிகவும் பலத்த காற்று மற்றும் பலத்த மழை பெய்யுமென திணைக்களம் தெரிவிக்கின்றது.

தேவேளை, நாட்டில் நிலவும் பலத்த காற்று மற்றும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 06ஆக அதிகரித்துள்ளது.

இந்த சீரற்ற காலநிலையால் 9,688 குடும்பங்களைச் சேர்ந்த 35,796 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 11 பேர் காயமடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிடுகின்றது. 34 குடும்பங்களைச் சேர்ந்த 121 பேர், 4 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 05 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ள அதேவேளை, 1,246 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

## அவசர நிலைக்கு...

நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அவசர செயற்பாட்டு நிலையத்தில் நேற்று (மே 24) நடைபெற்ற இந்த விசேட கலந்துரையாடலின் போது துரித நடவடிக்கைகள் முன்னெடுப்பது தொடர்பில் அதிகாரிகளுக்கு அமைச்சர் பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கினார். ஆங்காங்கே மரங்கள் முறிந்து விழும் அபாயம் குறித்தும் இந்த கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, கடந்த 19ஆம் திகதி முதல் இன்று வரையிலான ஐந்து நாட்களுக்குள் மாத்திரம் மரங்கள் முறிந்து விழுந்ததில் 06 பேர் உயிரிழந்துள்ளதுடன், 11பேர் காயமடைந்துள்ளதாகவும் 18 மாவட்டங்களில் 9,616 குடும்பங்களைச் சேர்ந்த 34,880 பேர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போதைய நிலையில் தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், அரச திணைக்களங்கள், மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிவாரண சேவை நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் குறிப்பாக பாதுகாப்புப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர், பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுத்து வரும் துரித நடவடிக்கைகளை இராஜாங்க அமைச்சர் இதன்போது பாராட்டினார். அண்மைக்காலமாக மரங்கள் விழும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதனை தடுக்கும் நடவடிக்கையாக தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

'சுரகிமு' நிகழ்ச்சியின் மூலம் பாடசாலை மற்றும் பாடசாலை வளாகத்தில் உள்ள மாணவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், வீதிகளில் மரங்கள் அதிகமாக விழுவதால் அவற்றை கட்டுப்படுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண அதிகார சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்களின் ஆதரவையும் அமைச்சர் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன், வீதியோரம் மரங்கள் நடுவது தொடர்பில் முறையான ஆய்வுகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய பின்னர் விசேட குழுவொன்றின் வழிகாட்டலின் கீழ் தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், பாதுகாப்பற்ற மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டட நிர்மாணங்களால் தாழ்நிலப் பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் மழை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளதையடுத்து எதிர்வரும் நாட்களில் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகளுக்கு முகங்கொடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் தென்னகோன் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். மேலும் சீரற்ற காலநிலை தொடர்பான அவசரநிலைகளை எதிர்கொள்ள பொதுமக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மேலதிக செயலாளர் கமகே தர்மதிலக உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## கன்னிக்கால் நடும் நிகழ்வு...

நடும் நிகழ்வு நேற்று (24) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் சுப முகூர்த்தத்துடன் நடைபெற்றது. இவ்வாறு 45 நாட்கள் பின்னர், அதாவது எதிர்வரும் ஜுலை 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் முதல் பெரஹரா திருவிழா ஆரம்பமாகவுள்ளது. 16 நாட்கள் நடைபெறும் இந்த ஊர்வலம் ஜுலை 21ஆம் திகதி இரவு நடைபெற்று ஜுலை 22ஆம் திகதி மாணிக்ககங்கையில் நீர் வெட்டு திருவிழாவுடன் நிறைவுபெறும் என கதிர்காமம் ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்
## (25.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பொருளாதார பற்ற குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் சம்பளம் உயர்வு பற்றிய தகவல் வரலாம்.

**ரிஷபம் :**
திடீர் திடீரென சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். மனக் குழப்பம் அதிகரிக்கும். எந்த காரியத்தையும் உடனடியாக செய்ய இயலாது.

**மிதுனம்:**
நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும். நாடு மாற்றம் வீடு மாற்றமும் ஏற்படலாம். தேடிப் பார்த்தோம் கிடைக்காமல் இருந்த ஒரு பொருள் இப்பொழுது தேடாமல் கைக்கு கிடைக்கும்.

**கடகம்:**
தொழில்வலம் சிறப்பாக இருக்கும். உத்யோக மாற்றம் உறுதியாகலாம். வெளிநாட்டிலிருந்து வரும் தகவல் ஆதாயம் தருவதாக அமையும்.

**சிம்மம்:**
தொழில் வெற்றி நடை போடும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி:**
நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.

**துலாம்:**
சுபச் செலவுகள் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். பெண் பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு:**
எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். இருப்பினும் உங்கள் ராசிநாதன் குருவோடு சுக்கிரன் இணைந்திருப்பதால் வழக்குகள் உங்களுக்கு சாதகமாக முடியும்.

**மகரம்:**
புனித பயணங்கள் அதிகரிக்கும். போராட்ட நிலை மாறும். புகழ்மிக்க ஆலயங்களுக்கு சென்று வழிபட்டு வருவீர்கள். தொழில் வளர்ச்சியில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.

**கும்பம்:**
சுகங்கள் சந்தோஷங்களும் வந்து சேரும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்திலிருந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.

**மீனம்:**
உடன்பிறப்புகள் வழியில் பிரச்சனைகள் ஏற்படலாம். சொத்து பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். முடிவுக்கு வந்த வழக்குகள் மீண்டும் தொடரலாம். இடமாற்றம் இனிமை தரும்.

## 8,944 குடும்பங்களை...

கடும் காற்று மற்றும் மரங்கள் முறிந்து வீழ்ந்த சம்பவங்களால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கைக்கமைய, மேல் மாகாணத்திலேயே அதிக பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இதன்படி மேல் மாகாணத்தில் 4,814 குடும்பங்களைச் சேர்ந்த 19,527 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

## பப்புவா நியூகினியாவில்...

வடமேற்கே சுமார் 600 கிலோமீற்றர் தொலைவிலுள்ள எங்கா மாகாணத்தின் காகலம் எனும் கிராமத்திலேயே நேற்று அதிகாலை 3.00 மணியளவில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மண்சரிவில் சிக்கி சுமார் 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. தற்போது அங்கு மீட்பு குழுவினர் விரைந்துள்ளதுடன், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு மீட்பு பணிகள் தொடர்வதாகவும் சர்வதேச செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

## சமுகமளிக்க தவறியவர்களுக்காக...

இவர்களுக்கென நாளை 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் நேர்முகப் பரீட்சையை சுகாதார அமைச்சில் நடத்துவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் II) சாமிக்க எச்.கமகே தெரிவித்துள்ளார்.

இதுவரை நடந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க தவறிய விண்ணப்பதாரர்கள் நாளை நடத்தப்படவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளிக்க வேண்டுமென்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் II) சாமிக்க எச்.கமகே தெரிவித்துள்ளார்.

## விசேட கடன் திட்டங்கள்...

இது தொழிலதிபர்களுக்கானதென்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதன்படி உள்ளூர் மற்றும் மாவட்ட மட்டத்தில் தொழில்துறையினரின் நிதி தேவைகள் கண்டறியப்பட்டு, வர்த்தக வங்கிகள் ஊடாக மானிய வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமெனவும், கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## தொடர்புடைய மற்றுமொரு...

சந்தேக நபர் பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாளை முதல்...

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளதால், அதனை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி செயலகத்தின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி நாளை 26ஆம் திகதி முதல் ஜூன் 01ஆம் திகதி வரை நடைபெறவுள்ள டெங்கு ஒழிப்பு வாரத்தின் போது கல்வி அமைச்சினூடாக மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு அறிவிக்கும் நோக்குடன் விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச நிறுவனங்கள், மத வழிபாட்டுத் தலங்கள், புதிய குடியிருப்புகள் போன்றவற்றை சுற்றிப் பரவும் டெங்கு அபாயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய சாகல ரத்நாயக்க, இதனை கடைப்பிடிக்காதவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மே மாதத்தில் மட்டும் 1,810 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், ஒன்பது மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

## 05 வருடங்களுக்கு...

சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டை பொருளாதார ரீதியில் உறுதியான நிலையில் மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி மேற்கொண்டு வரும் வேலைத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு இது பொருத்தமானது என்றும் அவர் கூறினார். சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் ஐந்து வருடங்களுக்கு நாட்டின் நிர்வாக பொறுப்பை வழங்குவதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மேலும் கூறினார்.

### தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

# பேருவளையில் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா இன்று

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதி





களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த விழாவில், புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனத்தின் நிறுவனரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

இந்த கௌரவிப்பு விழா பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியா ர் வித்தியாலய அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில் இன்று 25.05.2024 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சமூக சேவையாளர் எம். பாஸி ஸுபைர் மேற்கொண்டுள்ளார்.

இவ்விழாவுக்குரிய ஏற்பாடுகளை செய்திருக்கும் சமூக சேவையாளர் எம். பாஸி ஸுபைர் வீதியில் அலங்காரத் தோரண வளையம் அமைத்திருப்பதையும் விழா நடைபெறும் மண்டபத்தையும் விழாவில் வழங்கப்படவுள்ள விருதுகளையும் படங்களில் காணலாம்.







கண்டி மகியாவ அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் மூன்று தள இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தினரும் , மகியாவ கிராம பக்தர்களும் , கண்டி வாழ் சிங்கள, தமிழ் மக்களும் கலந்துகொண்டார்கள் .

# கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தின் பயிற்சிப் பட்டறை

## க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கானது

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் (தமிழ்ப்பிரிவு) ஏற்பாட்டில் அயல் பாடசாலை அதிபர்களின் ஆதரவில் நடாத்தப்படுகின்ற இம்முறை க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உந்துதல் பயிற்சிப் பட்டறை கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலய கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறை இன்று (25.5.24) காலை 8.30 மணிமுதல் 12.30மணிவரை நடைபெறவுள்ளது. இந்த பயிற்சிப் பட்டறையில் கண்டி நாவலப்பிட்டி, கம்பளை, புசல்லாவ, பன்வில, தெல்தெனிய ஆகிய பாடசாலைகளிலிருந்து சுமார் 1500 கலந்து கொள்ளவுள்ளனர்.

# புத்தளம் மாவட்ட அனர்த்தங்களில் 3499 குடும்பங்களை சேர்ந்த 11988 பேர் பாதிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு மற்றும் அசாதாரண நிலை காரணமாக 3499 குடும்பங்களைச் சேர்ந்த 11988 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம். எஸ்.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவில் 130 கிராம சேவகர் பிரிவில் 3499 குடும்பங்களைச் சேர்ந்த 11988 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் தற்போது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். தொடர்ச்சியாக மழை பெய்தால் மீண்டும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புத்தளம் மாவட்டத்தின் மஹாகும்புக்கடவல, கருவலகஸ்வெவ, மாதம்பை, முந்தல், புத்தளம், சிலாபம், ஆராச்சிக்கட்டுவ, கற்பிட்டி , மஹாவெவ, நவகத்தேகம பல்லம, நாத்தாண்டிய , வென்னப்புவ , தங்கொட்டுவ மற்றும் வன்னாத்தவில்லு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 05 கிராம சேவகர் பிரிவில் 1303 குடும்பங்களைச் சேர்ந்த 4495 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் கூறினார்.

அத்தோடு, வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 57 வீடுகளும், 9 வர்த்தக நிலையமும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளன. மேலும், சீரற்ற காலநிலை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன், 3 பேர் காயமடைந்துள்ளனர்.

மாதம்பை, ஆராச்சிக்கட்டுவ மற்றும் நாத்தாண்டிய ஆகிய பிரதேச செயலகத்திற்குற்பட்ட பகுதிகளிலேயே தலா ஒவ்வொரு மரணம் பதிவாகியுள்ளன.

அத்துடன், நாத்தாண்டிய பகுதியில் இருவரும், ஆராச்சிக்கட்டுவ பகுதியில் ஒருவரும் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு டாக்டர் நியமனம்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலை க்கு டாக்டர் எம்.ஏ.எஸ்.எம். முனவ்வர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாணத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கான பொறுப்பதிகாரிகள் (22) மாகாண ஆளுநரால் நியமனமிக்கப்பட்டனர்.சேவை மூப்பு மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது.

வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கான பொறுப்பதிகாரியாக டாக்டர் எம்.ஏ.எஸ்.எம். முனவ்வர் நியமிக்கப்பட்டதுடன், மாகாண ஆளுநர் நசீர் அஹமத் இவருக்கான நியமனக் கடிதத்தையும் வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வில் வடமேல் மாகாண பிரதம செயலளார் தீபிகா கே குணரத்தின, மாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை, சிறுவர் மற்றும் மகளிர் விவகார, சபை நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளர் நயனா தசநாயக்க , மாகாண பிரதி பிரதம நிர்வாக செயலாளர் ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க, மாகாண ஆயுர்வேத ஆணையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் எம்.ஏ.எஸ். எம். முனவ்வர், புத்தளம் ஜனாதிபதி விஞ்ஞானக் கல்லூரி அபிவிருத்திச் சங்க செயலாளரகாவும் கடமையாற்றி வருகின்றார்.



வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு ஒல்கொட் மாவத்தை புறக்கோட்டை எச்சத் போதிராஜ சங்கம் ஏற்பாடு செய்த வெசாக் பண்டிகை அன்னதான வைபவம் நேற்று நண்பகல் தலைவர் பி. நவரத்ன தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் வர்த்தகர் எஸ். ரி. எஸ். அருளானந்தன் மங்கள விளக்கேற்றுவதையும், அன்னதானம் பரிமாறுவதையும் படங்களில் காணலாம்.

# பதுளை சார்ணியா தமிழ் தேசிய மகா வித்தியாலய கௌரவிப்பு விழா

பதுளை சார்ணியா தமிழ் தேசிய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வாழும்போதே வாழ்த்துவோம் என்ற மாபெரும் கௌரவிப்பு விழாவும் சிறுகதை நூல் வெளியீட்டு விழாவும் இன்று 2024.05.25ஆம் தி கதி காலை 9 மணிக்கு கந்தேகெதர இந்து கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. பதுளை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் ஏ. தேவராஜனின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், சமுர்தி அஸ்வெஸ்சு திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் எஸ். சத்தியசீலன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். பதுளை கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜோதிலட்சுமி பத்மநாதன் நூல் நயவுரை ஆற்றவுள்ளார்.

இன்று காலை 8 மணிக்கு கந்தேகெதர நகரத்தில் கௌரவிப்பு விழாவின் ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது. 1980ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையுள்ள 30 ஆண்டு காலம் இப்பிரதேசத்தில் கல்விப் பணி செய்து சமூகத்திற்கு பெரும் தொண்டாற்றிய அதிபர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் விழாவும் தமிழ் ஆசானான வெல்லாவெளி விவேகானந்தன் எழுதிய "உமிச்சட்டி" என்ற சிறுகதையின் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு பதுளை சார்ணியா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற அனைத்து மாணவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையில் தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்" நாளை

கலைஞர்களுக்கு என்றும் கைகொடுக்கும், இலங்கையின் முன்னணி நிறுவனமாக திகழும் IDM Nations Campus International பிரதான அனுசரணையில் Colombo Commodities Pvt ltd பெருமையுடன் வழங்கும் கவிக்கமல் , பாசில், இணைந்து வழங்கும் “அக்ஷரா” “வீனஸ்” இசைக்குழுவினர்களின் “ இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், மொரின் ஜெனட், டாக்டர் ஜமீல்,சான் , லோகநாதன் , ஜவ்பர், கலந்து சிறப்பிக்கும் “தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் “ இன்னிசை மாலை, நாளை 26ஆம் திகதி ஞாயிறு மாலை 6.00 மணிக்கு கொழும்பு 07. பொது நூலகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெறவுள்ளது.

பிரபல தொழிலதிபர் டாக்டர் எம் சி பஹார்தீன் தலைமை தாங்கும் இந்த இசை நிகழ்விற்கு, பிரதம அதிதியாக ஐ டி எம் நேஷன்ஸ் கெம்பஸின் தலைவரும் ஜனனம் அறக்கட்டளையின் பிரதான அறக்காவலரும் தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயக மூர்த்தி கலந்து சிறப்பிக்கவிருக்கிறார்.

ஐ டி எம் நேஷன்ஸ் கெம்பஸ் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறையின் தலைவருமான அதி வணக்கத்திற்குரிய பிதா அருட் கலாநிதி எஸ் சந்துரு பெர்ணான்டோ கௌரவ அழைப்பில் வருகை தரவிருக்கிறார்.

இலங்கை கிரிக்கெட் பயிற்சிவிப்பாளர் ஜே எம். எம் ரிஸ்வான் முன்னிலை வகிக்க, கௌரவ அதிதிகளாக கலைஞர்களை என்றும் ஊக்குவிக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளர் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் வீரகேசரி பத்திரிகையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம். செந்தில்நாதனும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

விஷேட அதிதிகளாக முன்னாள் பிரதி மேயர் எம் டி எம் இக்பால், டாக்டர் கௌசல்யாதேவி, முன்னாள் தெகிவளை நகரசபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா, கேரம் பயிற்சிவிப்பாளர் ஜபர், கலாவிபூஷணம் இரா. தில்லைராஜன்,S.H.Colour House உரிமையாளர் ஜனாப் சாஜஹான் ,அகில இலங்கை சமாதான நீதவான், கொழும்பு நகரசபை உறுப்பினருமான கௌரவ ஏ. ஜோசப் பெர்ணான்டோ, விஷேடஅதிதியாக சிறப்பிக்கும் இசைநிகழ்விற்கு அதிதிகளாக கலைஞர் எம். என் நசார், தொழிலதிபர் எம் என் எம் ரபீக், சமூக சேவையாளர் ஏ சி எம் அலி, சமூக சேவையாளர் கொழும்பு நகரசபை உறுப்பினர் எம். பி சுதர்சன் , தொழிலதிபர் தவராஜா சேதுராஜா.அதிதிகளாக மக்கள் நலன் சம்மேளன தவிசாளர் ஜனாப் அஸீஸ் லக்கானா, தொழிலதிபர் மொஹமட் ரமீஸ், குருசாமி பிச்சைக்கிருஷ்ணா, குருசாமி புவனேஸ்வரன், கலைஞர் சண்மு, கவிஞர் தனபாலன், கலைஞர் பொன் பத்ம நாதன்,கலை அதிதிகளாக கலைஞர் ராதாமேத்தா, கவிமணி நஜ்முல் உசைன், கவிஞர் ஈழகணேஸ், கவிஞர் சிந்தனைப் பிரியன் சாமில் , கலைஞர் ராதா மேத்தா, டான் tv vj ரிஸ்வான்,சிரேஷ்ட கலைஞர் கே ஈஸ்வரலிங்கம், தமிழ் தென்றல் அலி அக்பர், இளநெஞ்சன் முர்சிதீன் கவிஞர் திலகம் பிரேம் ராஜ், சுவிட்சர்லாந்து கவிஞர் பசுவூர் கோபி, மற்றும் கலைஞர் ஏ ரவீந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஆளுமைகள்,கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள்,தொழில் அதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கவிருக்கும் இந்த நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி தொகுப்பு கலைஞர் பி. எம். நந்தகுமார் மற்றும் அஜித்குமார்இந் நிகழ்ச்சிக்கான பிரதான ஊடக அனுசரணை தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை , வசந்தம் எப். எம். , மொஹபத் tv , டான் தொலைக்காட்சி அக்ஷரா தமிழ் வழங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன் THINAKARAN
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI



# வடக்கின் உதயம்

## வடக்கில் கடல் கொந்தளிப்பு படகுசேவைகள் இரத்து



(யாழ்.விசேட நிருபர்)

வடக்கில் கடல் கொந்தளிப்பாக காணப்படுவதனால், யாழ்ப்பாணம், குறிகாட்டுவான் பகுதியில் இருந்து தீவுகளுக்கு செல்லும் படகு சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. குறிகாட்டுவான் நயினாதீவுக்கான படகு சேவைகள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு நடைபெறுகிறது.

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து நெடுந்தீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகிய பகுதிகளுக்கான படகு சேவைகளே இரத்து செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை நயினாதீவுக்கான படகு சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு, பயணிகளுக்கான பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டு பாதுகாப்பான பயண சேவைகள் இடம்பெறுகின்றன. வெள்ளிக்கிழமை, வெசாக் தின நிகழ்வுகள் என்பவை காரணமாக நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயம், நாகவிகாரை போன்றவற்றுக்கு செல்லும் பெருமளவான தென்னிலங்கை மக்களின் நலன்கருதி படகு சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு, பாதுகாப்பான பயண சேவையில் ஈடுபடுகின்றன.

## விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கிளிநொச்சியை சேர்ந்த நபரொருவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியை சேர்ந்த தம்பிராசா ரவிசந்திரன் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கனகபுரம் பகுதியில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக நேற்றையதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் விசேட உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய ஜனாதிபதியை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

## பனை மரம் முறிந்து வீழ்ந்து வீட்டின் கூரை சேதம்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு பகுதியில் வீடொன்றின் மீது பனைமரம் முறிந்து விழுந்தமையால், வீட்டின் ஒடுகள் உடைந்து சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை வீசிய காற்றின் காரணமாகவே வீட்டு வளவினுள் நின்ற பனை மரம் முறிந்து வீட்டின் மீது விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நேற்றைய தினம் வீசிய காற்று காரணமாக கொக்குவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

## சிறந்த சமூக சேவையாளர்களுக்கு விருது

(கோப்பாய் குறூப் நிருபர்)



யாழ்.முஸ்லிம் ஒன்றியத்தின் முக்கிய செயற்பாட்டாளர்களுக்கு சிறந்த சமூக சேவையாளர்களுக்கான விருது International HUMAN RIGHT Global Mission வழங்கி கௌரவித்துள்ளது. பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அருட்தந்தை கலாநிதி ஜோன் போல் ஏற்பாட்டில் International HUMAN RIGHT Global Mission அதிகாரிகளால்விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

யாழ்.முஸ்லிம் ஒன்றியம் கடந்த ஐந்து வருடம் மனிதநேய செயற்பாடுகளில் ஒன்றான மரம் நடும் பணியை மேற்கொண்டு வருகிறது. இதுவரை 9000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

வருடம் தோறும் மனிதநேய செயற்பாட்டாளர்கள் இனங்காணப்பட்டு இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட பொதியில் ஹெரோயின்; பெண் உள்ளிட்ட மூவர் கைது

(யாழ்.விசேட நிருபர்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதியொன்றினுள் போதைப்பொருளை மிக சூட்சுமமாக அனுப்பி வைத்த சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெண்ணொருவருக்கு தனியார் நிறுவனமொன்றின் பொதிகள் சேவைகள் ஊடாக, சேலை உள்ளிட்ட ஆடைகள் அடங்கிய பொதியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொதியினுள் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பொதியை பெற்றுக்கொண்டவர் மற்றும் அதற்கான பணத்தை வழங்கிய பெண் உள்ளிட்ட இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், கொழும்பிலிருந்து அவர்களுக்கு பொதியை அனுப்பி வைத்த நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## மன்னாரில் தொடரும் சீரற்ற காலநிலை; மீன்பிடி நடவடிக்கைகள் பாதிப்பு



(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நீடித்து வரும் பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக மீன்பிடி நடவடிக்கை பாதிப்படைந்துள்ளது.

வீசி வரும் கடும் காற்று காரணமாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளை தவிர்த்துள்ளனர்.

குறிப்பாக தாழ்வுபாடு, சௌத்பார், பேசாலை,பள்ளிமுனை ஆகிய கிராம மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையை தவிர்த்துள்ளனர்.

கடும் காற்று காரணமாக கடலலைகளும் அதிகம் காணப்படுவதனால் மீனவர்கள் தங்கள் மீன்பிடி வள்ளங்கள், வலைகள் உட்பட்ட உபகரணங்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியுள்ளனர்.

அதேநேரம் காற்றின் வேகம் காரணமாக கரையோர பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் மீனவர் வாடிகளும் சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலையக ரயில் சேவையில் தாமதம்

மலையகத்தில் தொடர்ந்து சீரற்ற காலநிலை நிலவிவருகின்றது. இதனால் பொதுபோக்குவரத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மலையக ரயில் தண்டவாளத்தில் மரங்கள் மற்றும் பாறைகள் விழுந்து கிடப்பதால் மலையக ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பதுளை நோக்கி செல்லும் மற்றும் பதுளையில் இருந்து புறப்படும் இரவு தபால் ரயில் மற்றும் சிறப்பு ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

## ஜெனரேட்டரிலிருந்து வெளியேறிய புகையை சுவாசித்தமையால் தந்தை, மகன் பலி



ஜெனரேட்டரை இயக்கிவிட்டு தூங்கச் சென்ற தந்தையும் மகனும் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்றுமுன்தினம் (23) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக புபுரஸ்ஸ பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

புபுரஸ்ஸ நெஸ்டா காலனியை சேர்ந்த 40 வயதுடைய சனத் ரோஹன மற்றும் 17 வயதுடைய ககன மதுசங்க ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு புபுரஸ்ஸ நகரில் அன்னதானம் வழங்குவதற்கு ஆயத்தமாகியிருந்த போது அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் தனது அறையில் ஜெனரேட்டர் இயந்திரத்தை இயக்க வைத்து தந்தையும் , மகனும் உறங்கச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் அதிகாலையில் இவர்கள் உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளனர். இது தொடர்பில் புபுரஸ்ஸ காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்ட போது, ஜெனரேட்டரிலிருந்து வந்த கார்பன் மோனாக்சைடு வாயு வை சுவாசித்ததால் இருவரும் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது .




## இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் - பாரத் அருள்சாமி

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு தேவையான உதவிகளையும், ஏற்பாடுகளையும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சும், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும் இணைந்து மேற்கொண்டுள்ளனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலுக்கமையவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



பெருந்தோட்டமனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக பிரதேச செயலக அதிகாரிகள், கிராம சேவகர்கள், பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதிநிதிகள், தோட்ட நிர்வாகத்தினர் ஆகியோருக்கு உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்கியுள்ளதாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும், இ.தொ.காவின் உப தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார். சீரற்ற காலநிலையால் நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வெள்ள மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் அவ்வப்போது ஏற்பட்டு வருகின்றன.

இவ்வாறு பாதிக்கப்படும் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதும், அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கும் இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஏதேனும் அனர்த்த அபாயம் இருப்பின் அது தொடர்பில் பெருந்தோட்ட நிதியத்துக்கு அல்லது கிராம சேவகருக்கு அல்லது தோட்ட அதிகாரிக்கு அறிவிக்குமாறும் பாரத் அருள்சாமி மேலும் தெரிவித்தார். அத்துடன், சீரற்ற காலநிலை தொடர்பில் மக்கள் விழிப்பாகவே இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## நீரிழிவு முகாமையில் உணவு, உள்ளம் நூல் வெளியீடு



(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் பொன்னாலையை சேர்ந்த சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மனால் நீரிழிவு முகாமையில் உணவு, உள்ளம், உடற்பயிற்சி என்ற நூல் நேற்று சுன்னாகத்திலுள்ள சித்த மருத்துவமனையில் வெளியிடப்பட்டது.

சித்த மருத்துவத்துறையில் இது இவரது இரண்டாவது நூலாகும்.

ஏற்கனவே 'ஆகாரமே ஆதாரம்' என்ற நூலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொடரும் சீரற்ற காலநிலை; மக்கள் அவதானம் தேவை

நாட்டில் தொடர்ச்சியாக நிலவிவரும் பலத்த காற்று மழை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு அறிவித்தலை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் தென்மேற்கு பருவமழை காரணமாக மழை மற்றும் காற்றின் நிலைமை தொடர்ந்து அதிகரிக்கும் என திணைக்களத்தின் புதிய அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகளவான கனமழை பெய்யக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, மேல், வடமேல் மாகாணங்களிலும் மன்னார், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மரம் முறிந்து வீழ்ந்து மூன்று வீடுகள் சேதம்

(கம்பளை நிருபர்)

ஹங்குராங்கெத்த பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஹேவாஹேட்ட நூல்கந்தூர பிரதேசத்திலுள்ள வீடுகளின் மேல் மரம் முறிந்து வீழ்ந்தமையால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

வீட்டு குடியிருப்பு பகுதியில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்தமையால் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

ஒரு வீடு முழுமையாகவும் மற்றைய இரு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதனால் வீட்டிலுள்ள பெண் ஒருவர் காயங்களுக்குள்ளாகி ரிக்கிலகஸ்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பாதுகாப்பு செயலாளரினால் தியவன்னா வெசாக் வலயம் திறந்து வைப்பு





பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் தலைவர் சுதர்ஷன குணவர்தன ஆகியோரினால் நேற்றுமுன்தினம் (மே 23) மாலை 'தியவன்னா வெசாக் வலயம் 2024' ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'புத்த ரஷ்மி' வெசாக் பண்டிகையையொட்டி இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தியவன்னா வெசாக் வலயம் 2024, பாதுகாப்பு அமைச்சு மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டென்சில் கொப்பேகடுவ மாவத்தை மற்றும் பத்தரமுல்ல பாதுகாப்பு அமைச்சின் வீதிகளில் அலங்கரிக்கப்பட்ட வெசாக் விளக்குகள் இவ்வாறு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. சுயாதீன தொலைக்காட்சியில் 'தியவன்னா வெசாக் வலயம் 2024' இன் நேரடி ஒளிபரப்பும் ஒரே நேரத்தில் இடம்பெற்றது. இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கலாசார குழுக்களின் பக்தி கீ (மத பக்தி பாடல்கள்) தியவன்னா வெசாக் வலயத்தின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாக இடம்பெறுகின்றது.

# AyurEx Colombo 2024 இல் சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கிற்கு பிரதான அனுசரணை வழங்கிய யூனிலீவரின் லீவர் ஆயுஷ்







நாட்டின் முன்னணியில் உள்ள ஆயுர்வேத வர்த்தக நாமங்களில் ஒன்றான *Lever Ayush* (லீவர் ஆயுஷ்), *AyurEx Colombo 2024* இல் நடைபெற்ற சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கின் பிரதான அனுசரணையாளராக செயற்பட்டது. 2023ஆம் ஆண்டில் உருவான வெற்றிகரமான கூட்டாண்மையை தொடர்ந்தும் கட்டியெழுப்பும் வகையில் மீண்டும் அது இவ்வாறு அனுசரணை வழங்கியுள்ளது. இந்நிகழ்வு பாரம்பரிய மருத்துவ முறைகளை கொண்டாடுவதற்கும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் ஒரு முதன்மையான தளமாக அமைந்தது.

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் அழகு மற்றும் சுகவாழ்வு, தனிநபர் பராமரிப்புக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷாமர சில்வா இது பற்றி தெரிவிக்கையில், "லீவர் ஆயுஷ் ஆகிய நாம், ஆயுர்வேதத்தின் ஞானத்தை நிலைநாட்டுவதற்கும் புத்தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் எம்மை அர்ப்பணித்துள்ளோம். *AyurEx Colombo 2024* நிகழ்வுடன் இணைந்த சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கிற்கான எமது கூட்டாண்மையானது இந்த அர்ப்பணிப்பை மேலும் பிரதிபலிக்கிறது. இந்த மதிப்புமிக்க நிகழ்வானது, ஆயுர்வேதத்தை உலக அரங்கிற்கு கொண்டு செல்வதன் மூலம், ஒத்துழைப்புப்பையும் அறிவுப் பரிமாற்றத்தையும் ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துகிறது. பாரம்பரிய மருத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் கல்வியை மேம்படுத்தும் தளமான *AyurEx Colombo 2024* உடன் ஒரு கூட்டாளராக இருப்பதில் நாம் பெருமிதம் அடைகிறோம். இந்த ஒத்துழைப்பின் மூலம், ஆயுர்வேதத்தின் பலன்கள் அடுத்த தலைமுறையினர் அணுகக்கூடியதாகவும் அவர்களுக்கு பொருத்தமானதாகவும் இருப்பதை உறுதி செய்ய நாம் முயற்சி செய்கிறோம்." என்றார்.

இந்த வெற்றிகரமான ஒத்துழைப்பு குறித்து கருத்துத் தெரிவித்த, சுகாதார அமைச்சின் ஆயுர்வேத திணைக்களத்தின் ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் நாயகம் வைத்தியர் தம்மிக அபேகுணவர்தன, "*Lever Ayush* ஆனது, *AyurEx Colombo 2024* சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கிற்கு பிரதான அனுசரணை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். அவர்களது தொடர்ச்சியான ஆதரவானது, பாரம்பரிய மருத்துவத் துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஒரு கருவியாக உள்ளது. 'மனிதர்கள், விலங்குகள், சூழல் தொகுதிகளின் நிலைபேறான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஒரே ஆரோக்கியம்' என்பதில் இவ்வருடம் கவனம் செலுத்துகிறது. இலங்கை மற்றும் உலகளாவிய சமூகம் ஆகிய இரண்டிற்கும் பயனளிக்கும், சுகாதாரப் பாதுகாப்பிற்கான முழுமையான அணுகுமுறைக்கான எமது தூரநோக்குடன் இது முழுமையாக ஒத்துப் போகிறது." என்றார்.

இவ்வருட அனுசரணையானது, இலங்கையின் வளமான ஆயுர்வேத மரபுக்கு லீவர் ஆயுஷின் ஆழமான அர்ப்பணிப்பை எடுத்துக் கூறுகிறது. சுகாதார அமைச்சின் ஆயுர்வேதத் திணைக்களத்துடன் இணைந்து களனிப் பல்கலைக்கழகத்தின் பட்டகற்கைகள் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில், 10 இற்கும் மேற்பட்ட பிரபல பேச்சாளர்களையும் சர்வதேச நிபுணர்கள் 15 பேரின் விரிவுரைகளையும் கொண்டிருந்தது.

2023 கூட்டாண்மையின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, *AyurEx Colombo 2024* இல் லீவர் ஆயுஷின் ஈடுபாடு அமைந்திருந்தது. கடந்த வருடம், அது சர்வதேச மாநாட்டிற்கான பிரதம அனுசரணையாளராகவும், கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சிக்கான முக்கிய பங்காளராகவும் செயற்பட்டது. இந்த வருட மாநாடானது, இத்துறையில் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் வெற்றி அடைவதற்கான ஒரு மூலோபாய உறுதிப்பாட்டை பிரதிபலித்தது.

## தினகரன் வர்த்தக உலா

சமன் பாஷிம்

## Samsung இன் இதயத்தில் அம்மாக்கள்




சர்வதேச அன்னையர் தினத்தை முன்னனிட்டு, *Samsung*ன் புரட்சிகர தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் திரைகளுக்குப் பின்னால் புத்தாக்கமான செயல்களை ஆற்றும் நிஜ வாழ்க்கை அனுபவங்களும் நுண்ணறிவுகளும் இந்த போற்றப்படாத ஹீரோக்களை கொண்டாடியது.

*Samsung*ன் நிதி நிர்வகிப்பாளர்களில் ஒருவரான நிலங்கா திலினியின் கணவர் ரசிக, *Samsung*ன் போக்கை வழிநடத்துவதில் தாய்மார்களின் ஆழமான தாக்கத்தை ஒப்புக்கொள்கிறார். "வேலை மற்றும் குடும்பம் இரண்டையும் நிலங்கா திறமையாக கையாளுவதால், தொழில்நுட்பத்திற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் இடையே உள்ள சிக்கலான சமநிலையை நான் புரிந்துகொள்கிறேன். அவரது பங்கு தொழில்முறைக்கு அப்பால் நீண்டுள்ளது." என்கிறார்.

*Samsung* இன் சேவைப் பிரிவில் சிரேஷ்ட பணிப்பாளர் ரூத் அண்டனியின் தந்தையான அண்டனி, தாய்மைக்கும் புத்தாக்கத்துக்கும் இடையே உள்ள ஆழமான தொடர்பு குறித்து கூறுகையில், ஒரு தந்தை மற்றும் துணைவியாக அவரது கண்ணோட்டத்தில் தொழில்நுட்பத்தில் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, *Samsung*ன் சேவைகளை மேம்படுத்துவதற்கான ரூத்தின் அணுகுமுறையில் குடும்ப அனுபவங்களின் தாக்கத்தை அவர் ஒப்புக் கொள்கிறார்.

முகாமைத்துவப் பணிப்பாளரின் செயலாளரான சலனிகா திலக்ஷியின் மகள் தனுதி, *Samsung*ஆல் வளர்க்கப்பட்ட உள்ளடக்கிய கலா சாரத்தை வலியுறுத்தி, தலைமைப் பதவியில் தாய்மாரின் செல்வாக்கை காண்பிக்கிறார்.

*Samsung* இலங்கையின் முகாமைத்துவப் பணிப்பாளர் *SangHwa Song*, "*Samsung*ல், தாய்மார்கள் புத்தாக்கத்தின் இதயத்தில் இருப்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். அதிகாரம், உள்ளடக்கம் மற்றும் ஒத்துழைப்பு மூலம், உலகமெங்கிலும் உள்ள அம்மாக்கள் தொழில்நுட்பத்தின் பயனாளிகளாக மட்டுமல்லாமல், அதன் கட்டமைப்பாளர்களாகவும் இருப்பதை சாம்சங் உறுதி செய்கிறது." என்றார்.

# வளர்ச்சியின் உறுதிப்பாட்டுடன் ரூ. 4 பில். கடன்பத்திரங்களை வெளியிடும் சியபத

சம்பத் வங்கி பிஎல்சியின் துணை நிறுவனமும், இலங்கையின் வங்கி அல்லாத நிதித்துறையில் புகழ்பெற்று விளங்கும் முன்னணி நிறுவனமுமான சியபத பினான்ஸ் பிஎல்சி, தனது கடனீட்டுப் பத்திர வெளியீட்டின் மூலம் 4 பில்லியன் ரூபாவை திரட்டுவதற்கான முடிவை அறிவித்துள்ளது.

2024 மார்ச் 6 அன்று, பட்டியலிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட, சிரேஷ்ட, பாதுகாப்பற்ற, மீட்டெடுக்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டும் முடிவை சியபத பினான்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது. ஆரம்ப சலுகையாக ரூ. 2 பில்லியன், மேலதிகமாக ரூ. 2 பில்லியனுடன் மொத்த சாத்தியமான வெளியீடு ரூ. 4 பில்லியன ஆகும்;. இந்த கடன் பத்திரங்கள் ஐந்தாண்டு காலத்துடன், முதலீட்டாளர்களுக்கு நிலையான வட்டி வீதத்தில் வருடாந்தம் வழங்கத் தயாராக உள்ளது.

இந்த வெளியீட்டின் மூலம் கிடைக்கும் வருமானம், சியபத பினான்ஸ் பிஎல்சியின கடன் பிரிவை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கப்படுகிறது, இது நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப நிலையான வளர்ச்சி மற்றும் மூலோபாய முதலீட்டு வாய்ப்புகளை வளர்ப்பதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன 'சியபத பினான்ஸ் பிஎல்சி இலங்கையில் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதால், எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான மற்றும் நிலையான நிதித் தீர்வுகளை தொடர்ந்து வழங்குவதற்கு இது உதவும் என நாங்கள் நம்புகிறோம்' என தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, இலங்கை மத்திய வங்கியால் (CBSL) நெறிப்படுத்தப்பட்ட சியபத பினான்ஸ் பிஎல்சி, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதித் தீர்வுகளுக்காகவும் சிறந்த அர்ப்பணிப்புக்காகவும், புகழ்பெற்ற ஒரு முதன்மையான நிதி நிறுவனமாக நற்பெயரைப் பெற்றுள்ளது. 900 இற்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்களைக் கொண்ட அர்ப்பணிப்புள்ள குழுவுடன், நிறுவனம் முக்கிய நகர்ப்புற மையங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களில் 48 கிளைகளை உள்ளடக்கியதாக அதன் தடத்தை விரிவுபடுத்தியுள்ளது.

# முன்னிலையில் தரப்படுத்தப்பட்ட ஆயுள் காப்புறுதி வழங்குநர் யூனியன் அஷ்யூரன்ஸ்

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கையின் #1 தர வெளிப்படையான ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநராக தரப்படுத்தப்பட்டுள்ளது.




ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா (TISL) அண்மையில் வெளியிட்டிருந்த கூட்டாண்மை அறிக்கையிடல் மதிப்பாய்வு 2023 (TRAC) அறிக்கையில் இந்த உயர் தரப்படுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் காணப்படும் 125 பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் மத்தியில் கூட்டாண்மை தகவல்கள் வெளிப்படுத்தல் செயன்முறைகளை மதிப்பாய்வு செய்திருந்த இந்த மதிப்பீட்டினூடாக, ஆறு பிரதான பிரிவுகளில் அறிக்கையிடல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. மோசடி தவிர்ப்பு நிகழ்ச்சிகள், நிறுவனசார் வெளிப்படைத்தன்மை, உள்ளக நிதிசார் அறிக்கையிடல், நாட்டுக்குநாடு அறிக்கையிடல், பாலின மற்றும் பாகுபாடின்மை அறிக்கையிடல் மற்றும் அரச ஒப்பந்தங்கள் மற்றும் விலைமனுக்கோரல்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய கொள்முதல் தொடர்பான அறிக்கையிடல் போன்றன அதில் அடங்கியிருந்தன.

ஆயுள் காப்புறுதிப் பிரிவில் யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னிலையாளராக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், TRAC புள்ளி வழங்கலில் 10 க்கு 8.75 புள்ளிகளைப் பெற்றிருந்தது. அதனூடாக வெளிப்படைத்தன்மையை சகல பிரிவுகளிலும் பின்பற்றியிருந்தது. மதிப்பாய்வில் ஒட்டுமொத்த சராசரிப் பெறுமதியான 10 இல் 5.85 எனும் TRAC புள்ளியை இந்தப் பெறுபேறு கடந்திருந்தது.

இலங்கையின் மாபெரும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், கடுமையான ஆளுகைக் கொள்கைகளை பின்பற்றுகின்றது. நிறுவனத்தினால் பரிபூரண ஆளுகைக் கட்டமைப்பு பின்பற்றப்படுவதுடன், ஒன்றுக்கு மேற்பட்ட செயன்முறைகளும் பின்தொடரப்படுகின்றன.

இவற்றில் குற்ற மோசடிகள் தவிர்ப்பு, உள்ளிருந்து தகவல் அம்பலப்படுத்தல் மற்றும் ஊழல் தவிர்ப்பு கொள்கைகள் போன்றனவும் அடங்கியுள்ளன. துறைசார் பங்காளர்களை பாதுகாத்து வழிநடத்தும் உறுதியான நடத்தைக் கோவையையும் யூனியன் அஷ்யூரன்ஸ் நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், குற்றச் செயல்களுக்கு பூஜ்ஜிய சகிப்பு வழிமுறையையும் பின்பற்றுகின்றது.

# படைப்புகளை AI மூலம் அங்கீகரித்து ஊடக விழிப்புணர்வை ஏற்படுத்தும் TikTok

புத்தாக்கமான வடிவமைப்பின் மூலம் எப்போதும் புத்தம் புதிய அனுபவத்தைச் சேர்க்கும் திறன் கொண்ட TikTok, AI தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளதாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. படைப்புகள் வெவ்வேறு தளங்களின் கீழ், குறிப்பாக உருவாக்கும் இடம் (Content Provenance) மற்றும் நம்பகத்தன்மை (Authenticity) ஆகியவற்றின் கீழ் AI ஆல் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தை தானாகவே அடையாளம் காண, உள்ளடக்க நற்சான்றிதழ்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதல் வீடியோ உருவாக்கும் தளமாகவும் TikTok மாறியுள்ளது.

AI மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தின் சாத்தியமான சவால்களை உணர்ந்து, வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க ஒரு வலுவான மாதிரியை உருவாக்குதல், TikTok இன் திட்டம் தானாகவே அனைத்து AI தாக்கம் கொண்ட உள்ளடக்கத்தையும் லேபிளிடுகிறது. கடந்த ஆண்டில், 37 மில்லியனுக்கும் அதிகமான வடிவமைப்பாளர்கள் லேபிளிங் மூலம் பயனடைந்துள்ளனர், அந்த வடிவமைப்புகளின் தோற்றம் பற்றிய தெளிவான புரிந்துகொள்ளுதலை வழங்குகிறது.

தனது படைப்புகளின் வெளிப்படைத் தன்மையை விரிவுபடுத்தி, அதன் அனைத்து உள்ளடக்கங்களுக்கும் அங்கீகாரத்தை மிக விரைவாக விரிவுபடுத்தியுள்ள TikTok, அந்த உள்ளடக்கங்களின் metadataவை பதிவிறக்கம் செய்தாலும் அங்கேயே இருக்கச் செய்திருப்பது சிறப்பு. இதன் மூலம், பாவனையாளர்களுக்கும் பிற தளங்களுக்கும் உள்ளடக்க உருவாக்கத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த தேவையான டிஜிட்டல் தர நிலையை TikTok உருவாக்கியது.

TikTok, MediaWise மற்றும் WITNESS உடன் கூடிய தொடர் கல்வித் திட்டங்களையும் ஊடக எழுத்தறிவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இங்கே, TikTok ஆனது, AI ஆல் உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் தவறான உள்ளடக்கத்தை வேறுபடுத்தி, ஒன்லைன் தகவல்களை பகுப்பாய்வு செய்ய பாவனையாளர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்த ஒத்துழைப்பின் மூலம், உலகளாவிய ஊடக கல்வியறிவை வளர்க்கும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்ட 12 வீடியோ பாடங்களின் தொடரை TikTok வெளியிட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த Adobe இன் பொது ஆலோசகர் மற்றும் தலைமை அதிகாரி, "உலகளவில் ஏராளமான படைப்பாளிகள் மற்றும் பாவனையாளர்கள் இருப்பதால், உள்ளடக்க ஆதாரம் (Content Provenance) மற்றும் நம்பகத்தன்மை (Authenticity) மற்றும் CAI ஆகிய இரண்டிற்கும் TikTok இன் தலையீடு முக்கியமானது. இந்த கூட்டாண்மை மூலம் அவர்கள் தங்கள் இலக்குகளை அடைய முடியும் என்று நான் நம்புகிறேன்." என தெரிவித்தார்.

MediaWiseன் பணிப்பாளர் திரு. அலெக்ஸ் மகாதேவன் இங்கு கருத்துத் தெரிவிக்கையில், "2019 ஆம் ஆண்டில் TikTok இல் எங்கள் Teen FactChecking Networkஐ அறிமுகப்படுத்திய பிறகு, நாங்கள் அதன் சார்பாக தலையிட குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டோம். இந்த சமீபத்திய திட்டத்தின் மூலம் போலி உள்ளடக்கத்தைக் கண்டறிய இன்னும் அதிக வாய்ப்புகளை வழங்குவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்." என தெரிவித்தார்.

Adobeன் தலைமையிலான Content Authenticity Initiative (CAI) இல் சேர்வதன் மூலம், TikTok அதன் உள்ளடக்கத்தின் துல்லியத்தை மேம்படுத்தவும், துல்லியமான தரநிலைகளை ஏற்றுக்கொள்வதில் முன்னணியில் உள்ளது. இந்த கூட்டு முயற்சி TikTokல் தானாகவே அடையாளம் காணப்பட்ட AIGC இன் அளவை அதிகரிக்கும், இது மேம்பட்ட பயனர் அனுபவத்திற்கும் நம்பிக்கைக்கும் வழிவகுக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வுக்காக AIA இன்சூரன்ஸிடமிருந்து சுவ வலங் திட்டம்

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான AIA இன்சூரன்ஸ் இலங்கைப் பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக AIA சுவ வலங் எனும் காப்புறுதித் துறையில் இந்த வகையில் முதலாவதாக அமைந்த டிஜிட்டல் மற்றும் மக்களுடன் நேரடியான முறையிலமைந்த புதுமையான பிரசாரத் திட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.



உலகளவில் பெண்களில் கண்டறியப்படும் பொதுவான புற்றுநோய்களில் ஒன்றாக மார்பகப் புற்றுநோய் அடையாளப்படுத்தப்படுகின்றது. இலங்கையில் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் இது 27% ஆகும். மேலும் ஒவ்வொரு நாளும் 14 புதிய நோயாளர்கள் மார்பகப் புற்றுநோயுடன் கண்டறியப்படுகின்றனர். எவ்வாறாயினும் இதனை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் எளிமையாகச் சிகிச்சையளித்துக் குணப்படுத்தக் கூடியதாகவே இருக்கும். பொதுவாக இலங்கை பெண்கள் பரிசோதனைகள் போன்ற நோய் கண்டறிதல் சோதனைகளுக்கு உட்படுத்தத் தயங்குகின்றனர்.

AIA இன்சூரன்ஸ் இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்துடன் இணைந்து இது தொடர்பான விழிப்புணர்வினை ஊக்குவிப்பதற்கு மற்றும் வழக்கமான சுய பரிசோதனையைத் தூண்டுவதற்கு விழிப்புணர்வுப் பிரசாரமான சுவ வலங்கினை வடிவமைத்திருக்கின்றது.

இலங்கை முழுவதுமுள்ள பெண்கள் சமையலுக்கு மண் பானைகளை (வலங்) கொள்வனவு செய்கின்றனர். அவ்வாறு மேற்கொள்ளும் போது அப்பானைகளைச் சரிபார்த்து அதில் வெடிப்புகள், நிறமாற்றம், ஏதேனும் கட்டிகள் அல்லது பானைகளைப் பயன்படுத்த முடியாதவாறான வேறு ஏதேனும் அறிகுறிகளை உணர்ந்து அப்பானைகளின் நீடித்த தன்மையினை அவர்கள் அடிக்கடி மதிப்பிடுவார்கள். உண்மையில் இந்த பழமையான பழக்கமானது சுவாரஸ்யமாக மார்பக புற்றுநோய்க்கான சுய பரிசோதனைகளுக்கு இணையாக உள்ளதோடு, இந்த நடைமுறையில் பெண்கள் மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகளான அளவு மற்றும் வடிவத்தில் உள்ள வேறுபாடுகள், நிறமாற்றம் மற்றும் கட்டிகள் போன்றவற்றைத் தொடர்ந்து தங்களைத் தாங்களே பரிசோதித்துக் கொள்ளவும் முடியும்.

# Ransomware கொடுப்பனவுகள் 500% அதிகரித்துள்ள Sophos

இணையத் தாக்குதல்களை தடுப்பதற்கும் புத்தாக்கமான பாதுகாப்பு தீர்வுகளை வழங்கும் உலகளாவிய தலைவரான Sophos, தனது வருடாந்திர "State of Ransomware 2024" survey report" கணக்கெடுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது கடந்த ஆண்டில் சராசரி மீட்கும் தொகை 500% அதிகரித்துள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளது. மீட்கும் தொகையை செலுத்திய நிறுவனங்கள் சராசரியாக 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்துவதாக அறிவித்துள்ளன, இது 2023ல் 400,000 அமெரிக்க டொலராக இருந்தது. இருப்பினும், மீட்கும் தொகை என்பது செலவில் ஒரு பகுதி மட்டுமே. மீட்கும் தொகையைத் தவிர்த்து, மீட்பதற்கான சராசரி செலவு 2.73 மில்லியன் அமெரிக்க டெலர்களை எட்டியுள்ளது, இது 2023 இல் Sophos அறிவித்த 1.82 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து சுமார் 1 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.



2023 இல் 66% உடன் ஒப்பிடும்போது, 59% நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ransomware தாக்குதல்களின் விகிதத்தில் சிறிதளவு வீழ்ச்சி இருப்பதாக இந்த ஆண்டு கணக்கெடுப்பு சுட்டிக்காட்டுகிறது. ransomware ஆல் பாதிக்கப்படும் நாட்டம் வருவாயுடன் அதிகரிக்கும் அதே வேளையில், சிறிய நிறுவனங்கள் கூட (வருமானத்தில் $10 மில்லியனுக்கும் குறைவானது) இன்னும் தொடர்ந்து குறி வைக்கப்படுகின்றன, கடந்த ஆண்டில் ransomware ஆல் பாதிக்குக் குறைவாக (47%) பாதிக்கப்பட்டுள்ளன.

2024 அறிக்கை, 63% மீட்கும் கோரிக்கைகள் 1 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது அதற்கு மேற்பட்டவை என்றும், 30% கோரிக்கைகள் 5 மில்லியன் டொலருக்கும் அதிகமாக இருப்பதாகவும், ransomware ஆபரேட்டர்கள் பெரும் பலனைத் தேடுவதாகக் கூறுகின்றனர். துரதிர்ஷ்டவசமாக, இந்த அதிகரித்த மீட்கும் தொகைகள் கணக்கெடுக்கப்பட்ட அதிக வருவாய் உள்ள நிறுவனங்களுக்கு மட்டும் அல்ல. 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவான வருவாயைக் கொண்ட நிறுவனங்களில் ஏறக்குறைய பாதி (46%) கடந்த ஆண்டில் ஏழு எண்ணிக்கையிலான மீட்கும் கோரிக்கையைப் பெற்றன.

"தாக்குதல் விகிதங்களில் சிறிதளவு வீழ்ச்சி என்பது ஒரு வாய்ப்பான நாம் மனநிறைவின் உணர்வாக எடுத்துக் கொள்ளக்கூடாது. Ransomware தாக்குதல்கள் இன்றும் மிகவும் மேலாதிக்க அச்சுறுத்தலாக உள்ளன மற்றும் சைபர் கிரைம் பொருளாதாரத்தை தூண்டுகின்றன. Ransomware இல்லாவிடில், இந்தத் தாக்குதல்களுக்கு முன்னோடி அச்சுறுத்தல்கள் மற்றும் சேவைகளின் அதே வகை மற்றும் அளவைப் பார்க்க முடியாது. ransomware தாக்குதல்களின் பெரும்பாலான செலவுகள், இது சம வாய்ப்புக் குற்றம் என்ற உண்மையை பொய்யாக்குகிறது. ransomware நிலப் பரப்பு ஒவ்வொரு சைபர் குற்றவாளிக்கும் திறமையைப் பொருட்படுத்தாமல் ஏதாவது வழங்குகிறது.

# கிழக்கின் குரல்



## சம்மாந்துறை, மத்திய முகாம் பாடசாலையில் நிலவும்
# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யுமாறு கோரிக்கை

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட மத்திய முகாம் பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப துரித நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் வலய கல்விப் பணிப்பாளரை கேட்டுள்ளார்.

மத்திய முகாம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் நீண்ட காலமாக கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவி வருகின்றது. இதனால் இப்பாடசாலை மாணவர்கள் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இதனையடுத்து இதுதொடர்பில் சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் ஆசிரியர் வெற்றிடங்களை விரைவில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக உறுதியளித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளருமான ஐ.எல்.எம்.மாஹிர் மற்றும் மத்திய முகாம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை அதிபர் வை.பீ.ஏ.சுல்தான், பாடசாலை அபிவிருத்தி குழு உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிரை சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி

தம்பலகாமம் குறூப் நிருபர்



பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானத்தை பெற்றுத் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது இரண்டு குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்றரை இலட்சம் பெறுமதியான தையல் இயந்திரம் மற்றும் ஒரு குடும்பத்திற்கு மிளகாய் தூள் அரைக்கும் இயந்திரம் ஆகியவற்றை வழங்கியது.

திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன் இவ்வுதவிகளை திருகோணமலையில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். பெண்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கவும் அதிக வருமானத்தை இத் தொழில் மூலம் ஈட்டிக் கொள்ளவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

## அம்பாறை சந்தையில் பொருட்கள் திருட்டு

அம்பாறை நகரில் சந்தையொன்றில் பொருட்களை திருடியதாக சந்தேகிக்கப்படும் மூன்று பெண்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனால் பொதுமக்கள் இவர்கள் தொடர்பில் தகவல்களை தந்து உதவுமாறு கேட்டுள்ளனர்.

குறித்த மூன்று பெண்களும் அண்மைக்காலமாக இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் இதுதொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அம்பாறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு 0718593256,0772921071 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் அம்பாறை பொலிஸார் கோரியுள்ளனர்.

## கடற்றொழிலுக்கு சென்றவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலுக்கு சென்ற தொழிலாளியொருவர் கடலில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தை சேர்ந்த 58 வயதுடைய அந்தோணிப்பிள்ளைறோமன்மெய்ன்ரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டுமரமொன்றில் மீன் பிடிப்பதற்காக கடலுக்குள் சென்ற வேளை, கட்டுமரத்திலிருந்து தவறி கடலினுள் விழுந்து உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைக்கவுள்ள ஸாஹிராக் கல்லூரி மாணவன்

(திருகோணமலை தினகரன்)



திருகோணமலை ஸாஹிராக் கல்லூரி மாணவன் பஃமி ஹசன் சலாமா எதிர்வரும் ஜுன் மாதம் 15 ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்தி சாதனையை நிகழ்த்தவுள்ளார்.

தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதான இம்மாணவன் கடந்த மூன்று மாதங்களாக சாதனை முயற்சிக்கான தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தியாவின் தனுஷ்கோடி, அரிச்சல் முனையிலிருந்து தலைமன்னார் வரையான 32 கிலோமீற்றர் தூரத்தை 8 மணி நேரத்தில் தாம் கடக்க எண்ணியுள்ளதாக புதனன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் சலாமா தெரிவித்தார்.

இவர் பாக்குநீரிணையின் இலங்கை கடல் எல்லையிலிருந்து தலைமன்னார் வரையான தூரத்தை பயிற்சி அடிப்படையில் நீந்தி கடந்துள்ளார்.

இவருக்கான நீச்சல் பயிற்சிகளை விமானப்படை கோப்பிறல் றொசான் அபேசுந்தர வழங்கி வருகின்றார்.

2021 ஆம் ஆண்டு தலைமன்னாரிலிருந்து தனுஸ்கோடிக்கு நீந்திச் சென்று மீளவும் அங்கிருந்து தலைமன்னாருக்கு 28 மணிநேரம்,19 நிமிடம்,58 செக்கனில் நிறைவு செய்து, ஆழிக்குமரன் ஆனந்தன் ஏற்படுத்தியிருந்த 51 மணிநேர சாதனையை முறியடித்த சாதனையாளர் ஆவார். மேலும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த திருகோணமலையைச் சேர்ந்த ஹரிகரனும் தானாக முன்வந்து இவரை பயிற்றுவித்திருந்தார்.

# மருதமுனை பிரீமியர் லீக் சம்பியன் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான சம்பியன் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மருதமுனையில் நடைபெற்றது.

எம்.பி.எல் நிறைவேற்று குழு தவிசாளர் முஸம்மில் நுஸைர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆபிதா ஹேன்லூம் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.என்.இஸட். றூமி பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பியன் வெற்றிகிண்ணத்தை எம்.பி.எல் நிறைவேற்று குழு தவிசாளரிடம் கையளித்தார்.

## சேருவில பிரதேசத்தில்
# வெசாக் பண்டிகை நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பங்கேற்பு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

திருகோணமலை சேருவில ரஜமகா விகாரையில் நேற்றுமுன்தினம் (23) வெசாக் பண்டிகை நடைபெற்றது. இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது குளிர்பானம், மதிய உணவு போன்ற தன்சல்கள் பொதுமக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு வெசாக் கூடுகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அதிகளவான பொதுமக்கள் இங்கு வருகை தந்திருந்தனர்.

# ஈரான் ஜனாதிபதியின் மறைவையொட்டி காத்தான்குடியில் ஜனாஸா தொழுகை



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பள்ளிவாசல்களில் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஈரான் ஜனாதிபதியின் மறைவையொட்டி ஜனாஸா தொழுகை மற்றும் பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெற்றன.

காத்தான்குடி அல் அக்சா ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகிய பள்ளிவாசல்களில் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்டோருக்கான மறைவான ஜனாஸா தொழுகை நடாத்தப்பட்டதுடன் பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது.

ஜும்ஆத் தொழுகையின் பின்னர் இந்த மறைவான ஜனாஸா தொழுகை நடைபெற்றது.

இதில் பெருமளவிலான பொதுமக்கள் கலந்து கொண்டு மறைவான ஜனாஸா தொழுகையிலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

# நுண்கடன் திட்டங்களால் பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்

## அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன்

(ஒலுவில் விசேட நிருபர்)



பிள்ளைகளை சரியான பாதையில் வளர்த்தெடுக்க வேண்டியது பெற்றோர்களின் கட்டாய கடமையாகும் இதில் யாரும் தவறு விடக்கூடாது என, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுூட்டல் அமைச்சினால் பிரதேச செயலக மட்டத்தில் ஏற்பாடு செய்துள்ள உள சமூக பிரச்சினைகளை குறைப்பதற்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். கிராம மட்டத்தில் வினைத்திறனாக செயற்பட்டு வருகின்ற கிராம மட்ட மாதர் அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளுக்கான" உள சமூக பிரச்சினைகளை அடையாளம் காணலும் தலையீடு செய்தலும்" எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற செயலமர்வில் மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போது தற்கொலைகள் அதிகரிப்பதற்கான காரணம் நுண்கடன் திட்டமாகும் இதனால் பெண்களே அதிகமாக பாதிக்கப்படுகின்றார்கள். தற்கொலைகளை குறைப்பதற்கு பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும். போதைப் பொருள் பாவனையினாலும் தற்கொலைகள் அதிரிக்கின்றன.

பெற்றோர்கள் குறிப்பாக பெண்கள் பிள்ளைகளின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பொருளாதார நிலைமையினால் சில குடும்பங்களில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கமான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. பெண்கள் எப்போதும் பிள்ளைகளை சிறந்த பண்புகளை ஊட்டி வளர்க்க வேண்டும்.

தாய், தந்தையர் பிள்ளைகளை சரியான பாதையில் வளர்த்தெடுக்க வேண்டியது அவர்களின் கட்டாயாகும் இதில் தவறவிடக்கூடாது.

வறுமை கல்வியை விடுவதற்கு ஒரு காரணமல்ல. வறுமையில் இருந்தவர்கள் தான் இன்று கல்வியில் சிறந்த தலைவர்களாக காணப்படுகின்றார்கள். பிள்ளைகள் தொடர்பான இலட்சியங்கள் பெற்றோர்களிடத்தில் காணப்பட வேண்டும்.

# அட்டாளைச்சேனை அல் – இபாதா கலாசார மன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நிதி ஒதுக்கீடு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் வினைத்திறனாக செயற்படும் அமைப்புக்களில் ஒன்றான அட்டாளைச்சேனை அல் இபாதா கலாச்சார மன்றத்தின் எதிர்கால வேலைத்திட்டங்களை சிறப்பாக செய்யும் நோக்கில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணம் அமைப்பின் ஸ்தாபகரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை அவர்களின் தலைமையில் அட்டாளைச்சேனையில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தேசிய அமைப்பாளர் எம்.எஸ். உதுமாலெப்பை அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டு 14 வருடங்களாக இயங்கிவரும் இந்த அல் இபாதா கலாசார மையம் பல்வேறுபட்ட சமூக நல வேலைத்திட்டங்களையும், மார்க்க விடயங்களையும் முன்னெடுத்து வருகிறது. அவர்களின் பணியை ஊக்கப்படுத்தும் விதமாக இந்த நிதி ஒதுக்கப்பட்டதாக இங்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் அட்டாளைச்சேனை கிளைத்தலைவர் மௌலவி யூ.எம். நியாஸி, செயலாளர் மௌலவி எம்.எப். நஸீர், அல் இபாதா கலாசார மன்றத்தின் செயலாளர் ஜே. பஸ்மீர், பொருளாளர் எம்.எஸ்.எம். பாஹீம், கொள்கைபரப்பு செயலாளர் எம்.எஸ்.எம். பைரூஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட உறுப்பினர் ஏ. ரஸாம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.எஸ்.எம். உவைஸ், பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர்களான எம்.ஜே.எம். அன்வர் நௌசாத், எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், அதிபர் எம்.ஐ.எம். றியாஸ், வட்டார வேட்பாளர்கள், அமைப்பாளர்கள் மு.கா முக்கியஸ்தர்கள் மற்றும் பிரமுகர்கள், அல் இபாதா கலாச்சார மன்றத்தின் உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மார்ச் 12 இயக்கத்தின் "மக்கள் மேடை" மே. 29 இல்!

(காரைதீவு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் 'மக்கள் மேடை' நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது. 'மார்ச் 12' இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் இந்நிகழ்வு காரைதீவு பாபா றோயல்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென மாவட்டத்திலுள்ள அரசியல் பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கிராம ரீதியாக மூவர் இந் நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாம் எமது வாக்குகளை அறிவு பூர்வமாக பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களை மாத்திரமே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்ப வேண்டும்.

இதுவே எமது தலையான கடமையாகும் என்று மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

## உள சமூக பிரச்சினைகளை குறைப்பதற்கான விழிப்புணர்வு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

உள சமூக பிரச்சினைகளை குறைப்பதற்கான விழிப்புணர்வு செயலமர்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிராம மட்டத்தில் வினைத்திறனாக செயற்பட்டு வருகின்ற கிராம மட்ட மாதர் அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளுக்கான "உள சமூக பிரச்சினைகளை அடையாளம் காணலும் தலையீடு செய்தலும்" தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலகத்தின் மேலதிக மாவட்ட செயலாளர் வீ. ஜெகதீஸன் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு வளவாளர்களாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம் கபீர், அம்பாறை மாவட்ட உளவளத்துறை ஆலோசகர் மனுஸ் அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புனித ஜூட்ஸ் வெற்றி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

வெற்றிலைக்கேணி புனித செபஸ்தியார் விளையாட்டு கழகத்தால் நடாத்தப்படும் அணிக்கு 07 பேர் கொண்ட வட மாகாண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டு கழகத்திற்கு எதிராக முல்லைத்தீவு புனித ஜூட்ஸ் அணியினர் 04–02 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர்.

இப் போட்டியில் புனித ஜூட்ஸ் அணி சார்பாக றிப்கான் மற்றும் மென்டிஸ் ஆகியோர் தலா இரண்டு கோல்களைப் புகுத்தினர். போட்டியின் சிறந்த வீரராக புனித ஜூட்ஸ் கழகத்தின் வீரர் றிப்கான் தெரிவு செய்யப்பட்டார்.

# குசல் மெண்டிஸ், பெர்னாண்டோ இலங்கை அணியுடன் இணைவு



விசா தாமதத்தை எதிர்கொண்டிருந்த இலங்கை அணியின் ஆரம்ப வரிசை வீரர் குசல் மெண்டிஸ் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ அமெரிக்கா சென்று டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் இலங்கை அணியுடன் இணைந்துள்ளனர்.

உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக இலங்கை அணி கடந்த மே 14 ஆம் திகதியே அமெரிக்கா சென்றபோதும் விசா கிடைக்காததால் மெண்டிஸ் மற்றும் பெர்னாண்டோ அப்போது அணியுடன் செல்ல முடியாமல் இருந்தனர்.

பயிற்சி பெறுவதற்காகவே இலங்கை அணியினர் முன்கூட்டியே அமெரிக்கா சென்றதோடு அவர்கள் வடக்கு கரோலினாவில் மொரிஸ்வில்லே மைதானத்தில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அணியினர் இரண்டு வாரங்களுக்கு முன்னரே அமெரிக்கா சென்று அங்குள்ள சூழலை பழகும் வகையில் பயிற்சிகளை ஆரம்பித்தது தொடர்பில் இலங்கை தேர்வுக் குழு தலைவர் உபுல் தரங்க ஆறுதலை வெளியிட்டுள்ளார். இலங்கை அணி அடுத்த வாரத்தில் இரண்டு பயிற்சிப் போட்டிகளில் ஆடவுள்ள நிலையில் அனைத்து வீரர்களும் உடல் தகுதியுடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஆடுகளங்கள் மந்தமாக இருப்பதாகவும் துடுப்பாட்ட வீரர்களுக்கு அது சவாலாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

டி20 உலகக் கிண்ணப் போட்டி அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் எதிர்வரும் ஜூன் 01 தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதனையொட்டி எதிர்வரும் மே 28 ஆம் திகதி பிளோரிடாவில் உள்ள பிரோவட் கௌண்டி அரங்கில் நெதர்லாந்து அணியுடனும் தொடர்ந்து மே 31 ஆம் திகதி அதே மைதானத்தில் அயர்லாந்து அணியுடனும் இலங்கை அணி இரு பயிற்சிப் போட்டிகளில் ஆடவுள்ளது.

## அமெரிக்காவிடம் தொடரை இழந்தது பங்களாதேஷ்



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியிலும் 6 ஓட்டங்களால் வெற்றியீட்டி தொடரை 2–0 என கைப்பற்றி அதிர்ச்சி கொடுத்துள்ளது அமெரிக்க அணி.

டெக்ஸாஸில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் அணித் தலைவர் மொன்க் படேலின் 42 ஓட்டங்களுடன் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட அமெரிக்க அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் 145 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 78 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து ஸ்திரமான நிலையில் இருந்தபோதும் கடைசி எட்டு விக்கெட்டுகளையும் 60 ஓட்டங்களுக்குள் இழந்தது.

வேகப்பந்து வீச்சாளரான அலிக்கான் 25 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி நெருக்கடி கொடுத்தார். பங்களாதேஷ் அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (36) மற்றும் முன்னாள் அணித் தலைவர் ஷகீப் அல் ஹசன் (30) அதிகபட்ச ஓட்டங்களை பெற்ற போதும் அந்த அணி 19.3 ஓவர்களில் 138 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டி இன்று நடைபெறவுள்ளது.

பப்புவாவில் பாரிய நிலச்சரிவு

# ஆறு கிராமங்கள் புதைந்தன பலர் உயிரிழந்திருப்பதாக அச்சம்



பப்புவா நியூ கினியில் மலைப் பிரதேசத்தில் ஆறு கிராமங்களை தாக்கிய நிலச்சரிவு ஒன்றில் பல வீடுகள் புதையுண்ட நிலையில் கிராம மக்கள் பலரும் உயிரிழந்திருக்காலம் என்று அஞ்சப்படுகிறது.

தொலைதூர என்கா மாகாணத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 3 மணி அளவில் கிராம மக்கள் உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

'பாரிய நிலச்சரிவில் பெரும் பொருள் மற்றும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளது' என்று மாகாண ஆளுநர் பீட்டர் இபாடஸ் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். இதில் நூற்றுக்கணக்கானவர்கள் புதையுண்டிருப்பதாக உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் ஆறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் தாக்கப்பட்டிருப்பதாகவும் இது முன்னெப்போதும் நிகழாத ஓர் அனர்த்தம் என்றும் அவர் பின்னர் குறிப்பிட்டார். இதனால் கணிசமான சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவசர மருத்துவக் குழுக்கள், இராணுவம், பொலிஸ் மற்றும் ஐ.நா நிறுவனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து பாதிப்பின் அளவை மதிப்பிட்டு வருவதோடு காயமடைந்தவர்களுக்கு உதவி வருகின்றனர்.

அடர்த்தியான மரங்கள் சூழ்ந்திருக்கும் முங்காலோ மலையில் பாறைகள் மற்றும் மண் மேடுகள் சரிந்திருக்கும் படங்கள் சம்பவ இடத்தில் இருந்து வெளியாகியுள்ளன. உள்ளூரைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் உயிர் தப்பியோரை தேடி அந்த மண் மேட்டை தோண்டுவதும், அவநம்பிக்கையில் அழுதபடி இருப்பதையும் காண முடிகிறது.

'நிலச்சரிவு கடந்த இரவு மூன்று மணி அளவில் இடம்பெற்றதோடு 100க்கும் அதிகமான வீடுகள் புதையுண்டன' என்று உள்ளூர் சமூக அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் வின்சன்ட் பியாட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். 'அந்த வீடுகளில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை தெரியாதுள்ளது' என்றும் அவர் கூறினார்.

அனர்த்தம் இடம்பெறும்போது கிராமத்தில் 300 பேர் வரை இருந்திருக்கலாம் என்று அருகில் உள்ள பொர்கேரா பகுதியின் வர்த்தக மற்றும் தொழில்துறை சங்க தலைவர் நிக்சன் பகேயா குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்த எண்ணிக்கை உடன் உறுதி செய்யப்படவில்லை.

இதில் சுமார் 100 பேர் வரை உயிரிழந்திருப்பதாக அவுஸ்திரேலிய ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் நிர்வாகம் இதனை இன்னும் உறுதி செய்யவில்லை.

உயிரிழந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 100 மற்றும் 500 இற்கு இடையே இருக்கும் என்று செஞ்சிலுவை சங்கம் கணித்துள்ளது. எனினும் சரியான நிலை குறித்து கண்டறிய முயன்று வருவதாக செஞ்சிலுவை சங்க பப்புவ இடைக்கால பொதுச் செயலாளர் ஜனட் பிலமன் தெரிவித்துள்ளார்.

'நிலச்சரிவை தூண்டுவதற்கான பூகம்பம் அல்லது எந்த ஒரு சம்பவமும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இங்கே தங்க சுரங்கம் ஒன்று இருப்பதோடு அந்த மலையில் மக்கள் தங்க சுரங்கம் தோண்டியுள்ளனர்' என்று பிலமன் குறிப்பிட்டுள்ளார்.

இல்லாவிட்டால் கடும் மழை நிலச்சரிவை ஏற்படுத்தி இருக்கக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடிக்கடி மழை பெய்யும் இந்தப் பகுதியில் இந்த ஆண்டில் கடும் மழை, வெள்ளம் பதிவாகியுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் அருகாமை மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு ஒன்றில் 23 பேர் கொல்லப்பட்டனர்.



## சர்வதேச செய்திகள்

# காசாவில் இஸ்ரேலின் தாக்குதலில் மருத்துவமனைகள் முக்கிய இலக்கு

## எரிபொருள் இன்றி மற்றொரு மருத்துவமனை செயலிழப்பு



காசாவில் இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு மேலும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மருத்துவமனைகளும் இலக்கு வைக்கப்படும் நிலையில் மத்திய காசாவில் உள்ள அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனையின் மின்பிறப்பாக்கிகள் எரிபொருள் இல்லாததால் செயலிழந்திருக்கும் சூழலில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் உயிர் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர்.

காசாவில் பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருக்கும் தெற்கில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவில் இஸ்ரேலிய படைகள் மக்கள் செறிந்து வாழும் பகுதியை நோக்கி தொடர்ந்து முன்னேறி வருவதோடு வான் மற்றும் பீரங்கி தாக்குதல்கள் நீடித்து வருகின்றன.

இஸ்ரேலிய இராணுவ வாகனங்கள் கிழக்கு ரபாவில் இருந்து மையப் பகுதியின் ஊடாக ஷபூரா அகதி முகாமின் புறநகர் பகுதியை அடைந்திருப்பதோடு அங்கு கடுமையான பிராங்கி தாக்குதல் சத்தங்கள் கேட்டு வருவதாக பலஸ்தீன உத்தியோகபூர் செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.



ராபவுக்கு வெளியில், தெற்கு காசாவில் தற்போது இயங்கும் மிகப்பெரிய மருத்துவமனையான ஐரோப்பிய காசா மருத்துவமனைக்கு மேலால் இஸ்ரேலின் ஆளில்லா விமானங்கள் வட்டமிடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரபாவின் மேற்கில் உள்ள சனநெரிசல் மிக்க யிப்னா மாவட்டத்தை நோக்கி இஸ்ரேலிய இராணுவ வாகனங்கள் முன்னேறுவதாக முன்னதாக செய்தி வெளியாகி இருந்தது.

ரபா போன்று வடக்கு காசாவில் இஸ்ரேல் தீவிர தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக வடக்கு காசாவில் உள்ள மருத்துவமனைகளின் நிலைமை மோசமடைந்து வருகின்றன. கமால் அத்வான் மருத்துவமனை கடந்த வியாழக்கிழமை இரவு இரு முறை இஸ்ரேலிய பீரங்கி தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதோடு அல் அவ்தா மருத்துவமனையும் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனை கதவுகள் உட்பட மருத்துவனைகளின் அனைத்தையும் இஸ்ரேலிய படையினர் அழித்து வருவதாக அல் அவ்தா மருத்துவமனையின் மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். படையினர் ஒலிபெருக்கியை பயன்படுத்தி நோயாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை மருத்துவமனையில் இருந்து வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளனர்.

எனினும் ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளை மருத்துவமனையில் இருந்து வெளியேற்றுவதற்கு அம்புலன்ஸ் வசதியை தரும் வரை அங்கிருந்து வெளியேற சில மருத்துவ பணியாளர்கள் மறுத்து வருவதாக கூறப்படுகிறது. இதே நேரம் மத்திய காசாவின் அல் அக்சா தியாகிகள் மருத்துவமனையின் மின் பிறப்பாக்கிகள் செயலிழந்துள்ளன. அளவுக்கு அதிகமானோர் நிரம்பி வழியும் இந்த மருத்துவமனையில் பெரும்பாலான உபகரணங்களை பயன்படுத்த முடியாத நிலையில் நோயாளிகளுக்கு வெறுங்கைகளால் சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அந்த மருத்துவமனையின் பேச்சாளரான கலீல் அல் டெக்ரான், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

'இது அதிகமான நோயுற்ற மற்றும் காயமடைந்தவர்கள் உயிரிழப்பதற்கு காரணமாகக் கூடும்' என்று கூறி அல் டெக்ரான், சில நோயாளர்கள் தரையில் வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

மருத்துவமனை இயங்குவதற்கு நாளொன்றுக்கு 5,000 லீற்றர் எரிபொருள் தேவைப்படும் நிலையில் கடந்த புதன்கிழமை 3,000 லீற்றர் மாத்திரமே கிடைத்ததாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அல் அக்ஸ் தியாகிகள் மருத்துவமனை செயலிழந்த நிலையில் மத்திய காசாவின் டெயிர் அல் பலாவில் இன்னும் இரண்டு மருத்துவமனைகளே தொடர்ந்தும் இயங்குவதாக ஐ.நா. அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

காசாவுக்கு உதவிகள் வரும் பிரதான வாயிலாக இருந்த எகிப்துடனான ரபா எல்லையை இஸ்ரேலியப் படை கடந்த மே 6 ஆம் திகதி கைப்பற்றியது. குறிப்பாக இந்த வழி ஊடாகவே காசாவுக்கு எரிபொருள் சென்றது.

காசாவில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஐ.நாவுக்கு நாளொன்று 200,000 லீற்றர் தேவைப்படுகிறது. எனினும் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் எரிபொருள் கிடைப்பது சீரற்ற வகையில் இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி தெரிவித்துள்ளார். ஐ.நாவுக்கு கடந்த ஞாயிறன்று 70,000 லீற்றரும், செவ்வாயன்று மேலும் 100,000 லீற்றருமே எரிபொருள் கிடைத்தது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு காசாவின் ஜபலியா நகரில் இரு வெவ்வேறு பதில் தாக்குதல்களில் இஸ்ரேலிய மெகாவா 4 டாங்கிகள் மூன்றை போராளிகள் இலக்கு வைத்ததாக ஹமாஸ் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படை குறிப்பிட்டது. ஜபலியா அகதி முகாமில் உள்ள அஜர்மா வீதியில் வைத்து இரு டாங்கிகளை அல் யாஸின் 105 ரொக்கெட்டுகள் மூலம் தாக்கியதாக டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த முகாமின் அல் சாசீப் பகுதியில் வைத்து மற்றொரு டாங்கியை வெடிக்கச் செய்ததாகவும் அது கூறியது.

### 3 பணயக்கைதிகளின் உடல்கள் மீட்பு

ஜபலியாவில் நகர்புற போர் நீடிப்பதோடு அங்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஒன்றில் மூன்று பணயக்கைதிகளின் உடல்களை மீட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இதில் சானன் யப்லொங்கா, பிரேசிலிய இஸ்ரேலியரான மைக்கல் நிசன்பவும் மற்றும் பிரான்ஸ்மெக்சிகோவைச் சேர்ந்த ஒரியோன் ஹர்னன்டஸ் ரடொக்ஸ் ஆகியோரின் உடல்களை மீட்டதாகவும் அது தொடர்பில் அவர்களின் குடும்பத்தினர் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அந்த இராணுவம் குறிப்பிட்டது.

இவர்கள் அனைவரும் காசா போரைத் தூண்டிய ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போது கொல்லப்பட்டவர்கள் என்று இஸ்ரேல் இராணுவம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஒக்டோபர் 7 தாக்குதலின்போதும் 250க்கும் அதிகமானவர்கள் பணயக்கைதிகளால் பிடிக்கப்பட்ட நிலையில் காசாவில் தொடர்ந்தும் 130 பேர் வரை பணயக்கைதிகளால் இருப்பதாக இஸ்ரேல் நம்புகிறது.

காசாவில் தொடர்ந்து 231 ஆவது நாளாகவும் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா நகரில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாக வபா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அல் அயூபி குடும்பத்துக்கு சொந்தமான குடியிருப்பின் மீது நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குகின்றனர்.

வடக்கு காசாவில் பல வீடுகளையும் இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் மேலும் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். காசா நகரின் வடக்கில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அங்கு அடைக்கலம் பெற்றிருந்த குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். ஜபலியா அகதி முகாமுக்கு அருகில் அல் பக்ஹூரா பகுதியில் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் குறைந்தது ஐவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

மத்திய காசாவில் அஸ் ஸாவியா நகரில் இடம்பெற்ற இஸ்ரேலின் தாக்குதல் ஒன்றில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். காசா மீது இஸ்ரேல் கடந்த எட்டு மாதங்களாக நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 35,800ஐ தாண்டியுள்ளது.

இந்நிலையில் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தையை புதுப்பிக்கும் வகையில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ.வின் தலைவர் வில்லியம் பர்ன்ஸ் இஸ்ரேலிய பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாரிஸ் பயணமாக இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. காசா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக ஸ்தம்பித்திருக்கும் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் விருப்பத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.